Registered No. M. 878.

5-MAR1924

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization.

தொகுதி [illegible]	1917-வரு ஏப்ரல்மீ பிங்களவரு சித்திரைமீ	பகுதி 12

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்

(CONTENTS)

பக்கம்

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ. 443
Current events—R. Rangaswamy Iyer. B. A.

2. பெண்கல்வி—தி. யம். முகையதீன் கவிராயர் 451
Female Education——T. M. Mohideen Kavirayar

3. ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜய்யர் 458
Atmabodham—Yogi Sundararajier

4. பிரஹ்மக்ஞான தரிசனம்—(பாலபாடம்)-வி. வெங்குசாமி ஐயர் 460
Elements of Theosophy—V. Vengusamy Iyer

5. நக்ஷத்திர பிரகாசம்—ஜகத்குரு தாஸன் 463
Star light—Jagatguru dasan

6. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. 467
Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.

7. சமாசாரக் குறிப்பு—News.

8. இந்திய புத்திரிகளுக்கு ஓர் விக்ஞாபனம்— 475
An appeal to the daughters of India

9. புத்தகவரவு—Review of Books 481

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாராதது பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு ஸித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், ஸிட்னீ சன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூலமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும்,

பார்சல்கள் வாங்கும்பொழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லபிலைப் பார்த்து வாங்குங்கள். உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி முறப்பா கவர்மெண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கத்தகாத மருந்துகள் பலவற்றைப் பிரசுரம் செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம், ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆனதால். ஆரோக்கிய பாக்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியத்வசியம இல்லாவிட்டால் நானாவிதமான வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஷ்டான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியை தருவித்து அதில் முறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி முறப்பா மூத்திரசம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேகவித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும் அப்படி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி முறப்பா மிகவும் மேன்மையானது. தவிர மற்றெதுவும் இம்முறப்பாவுக்கு ஈடாகாது. இம் முறப்பாவில் எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்முறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக்கொடுக்கும் 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி. மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி மன்னாலால் டில்லி வைத்தியர்,
நெ. 5 ஆவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

சொற்பகாப்பிகள்தான்! சொற்பகாப்பிகள்தான்!

பூர்ணசந்திரோதயம்.

நான்காம் தொகுதி.

பகவான் கௌதம புத்தர் பிதகொராஸ் தேவாபி (ஷோடசகலாமாலை) ஸ்ரீ அன்னிபெஸெண்டு, கர்னல் ஆல்காட்,	சரித்திரங்கள்.
பூலோகபுவர்லோக சம்பந்தம். அகல்யா சாபவிமோசன தத்வம்	முக்கிய விஷயங்கள்

காலஞ்சென்ற பத்திராதிபரும் மதுரை பிரஹ்மக்ஞான சபைத்தலைவருமான ப நாராயண ஐயர் சரித்திரம்.

இவைகள் அடங்கியது

முந்தினவர்களுக்குத் தான் கிடைக்கும்

பைண்டான புத்தகம் விலை ரூ 2—4—0

முந்துங்கள்! முந்துங்கள்!!

உ

சோதிட விளம்பரம்

பலதீபிகை:—சோதிடம் பயில இதுவே சிறந்த வழி காட்டி. காலபுருஷ அங்கம்முதல் லத்தா பலன் வரை விரிவாய் எடுத்துரைக்க வல்லது. 26 அத்தியாயங்கள் அடங்கிய 236 பக்கங்கள் கொண்டது.

காலிகோ பைண்ட்	ரூ 1—8—0
ராப்பர் ,,	ரூ 1—4—0

சோதீட கணிதம்:—சுதேச விராசிமானம் கிரக லக்கின புஸ்தகங்கள் ஆம் இவைகளை நன்கறியும் ஆற்றல் விளக்க வல்லது.

ராப்பர் பைண்ட்	ரூ 0—6—0

புட்பபந்தம்:— மழை வளம் உண்மை யின்மையும் கூறி இவ்வகைப்பயிர் லாபம் உண்டெனவுங் கூற வல்லது.

ராப்பர் பைண்ட்	ரூ 0—4—0

இப்புத்தகங்களுக்கு வி. பி. செலவு பிரத்தியேகம்.

கு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி
1, ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-ஞூ ஏப்ரல்மீ
பிங்களஞூ சித்திரைமீ | பகுதி 12

தற்கால நிலைமை.

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களில் மகாப் பிரளயம் போல நடைபெற்றுவரும் கோரயுத்தமானது ஆரம்பித்து சுமார் 2 வருஷம் 8மீ காலமாகிறது. இதற்கு முன் நடைபெற்ற எல்லா யுத்தங்களைப் பார்க்கிலும் இந்த யுத்தமானது, பணச்செலவிலும், உயிர்ச்சேதத்திலும், கொடுமையிலும், மிகுந்து நிற்கிறது. இந்த யுத்தத்தின் கொடுமையை உலகத்தில் அனுபவிக்காதவர்கள் கிடையாது. உலக முழுதும் இந்த யுத்தத்தை நிறுத்தும்படி கடவுளை பிரார்த்திக்கின்றது. ஆனால் ஸர்வநியந்தாவான இறைவன் சங்கற்பமின்றியா இந்த யுத்தம் நிகழ்ந்தது? யாது காரணம் பற்றி இது நடைபெற்றதோ, எந்த முடிவைக் கருதி இந்த போரானது மூண்டதோ, அந்த முடிவானது கைகூடினவுடன் இந்த யுத்தமும் முற்றுப்பெறும். அம்முடிவை யறிவார் யார் உளர்? இந்த யுத்தம் முடிவுக்கு வர மார்க்கத்தைக் காணோமே. இன்னும் அதிகரிக்கும் போலவே தோன்றுகின்றதே. ஆனால் எல்லாம் இறைவன் செயல்.

ஜர்மனி தேசத்து அரசனுகிய கெய்சரைக் கட்டுப் படுத்தக் கூடியது உலகத்தில் ஒன்றுமில்லை போலும். கடவுள் என்று ஒரு வஸ்து இருக்குமாகில் அப்பரம் பொருளையும் வேலைக்காரருள் ஒருவராக அவ்வரசர் கருதுவார் போலும். அகாரணமாய் பெல்ஜியத்தில் படையெடுத்தார். அந்நாட்டிலுள்ள நிராயுதர்களான ஸ்திரீ புருஷர் குழந்தைகளை, வதைத்தார். நகரங்களை யெரித்தார். இதுகாறும் யுத்தங்களில் அனுசரித்து வந்த ஒவ்வொரு விதியையும் நிராகரித்தார். யுத்தத்தில் காயம்பட்டவர்களை சிகித்ஸை செய்வதற்காக கொண்டுபோகும் ஆஸ்பத்திரிக் கப்பல்களை ஒருவரும் சேதப் படுத்தக் கூடாது என்று எல்லோரும் ஒப்புக்கொண்ட விதி. அதை மீறி அவ்விதக் கப்பல்களை சுட்டு கடலில் முழுகும்படி செய்தார். இக்கொடுமைகள் போதாது என்று சில மாதங்களாக எந்த தேசத்துக் கப்பல்களாயினும் குறிப்பிட்ட இடங்களை மீறி வந்தால் ஸப்மரைன் என்ற கடற்குள் செல்லும் சிறு கப்பல்களைக் கொண்டு சுட்டுவிடுவதாக விரதம் பூண்டு, அங்ஙனமே எல்லா தேசத்துக் கப்பல்களையும் நாசப்படுத்தி வருகிறார். இவ்விதமான முறை கடந்த நடபடிக்கைகளை பலமுறை ஆக்ஷேபித்தும் பயனில்லாமல் போனதால் அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளுக்கும் ஜர்மனிக்கும் யுத்தம் நேரிட்டு விட்டது. செல்வத்திலும், ஜனப்பெருக்கிலும் மிகுந்த ஐக்கிய நாட்டாரும் இங்கிலாந்துடன் சேர்ந்துவிட்டதால் இனியாவது இக்கோர யுத்தம் விரைவில் முடிவுக்கு வரமாட்டாதா?

*
* *

மேல் நாடுகளில் ஸ்திரீகள் தங்கள் உரிமைகளை விசாலப்படுத்தவேண்டுமென்றும், எங்ஙனம் புருஷர்கள் பார்லிமெண்டு என்ற சட்ட நிரூபண சபைக்கு பிரதிநிதிகளையனுப்புகிறார்களோ அங்ஙனமே தாங்களும் ஸ்திரீகளை பிரதிநிதிகளாய் அனுப்பவேண்டுமென்றும், மும்முரமாக அநேக வருஷகாலமாய் முயன்று வந்ததும், சில தேசங்களில் ஸ்திரீகளுக்கு அவ்வுரிமைகள் கிடைத்திருப்பதும், மற்ற சில தேசங்களில் இன்னும் கிடைக்காமலிருப்பதும் யாவரும்

அறிந்த விஷயம். அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய நாடுகளில் ஆட்சி சபையாகிய காங்கிரஸ்ஸில் மிஸ் ராங்கின் என்ற ஒரு மாதுமணி அங்கத்தினராக விருக்கிறதாகப் பத்திரிகையில் படிக்கிறோம். ஆனால் இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்கு இவ்வித பாத்தியங்கள் இல்லாம லிருந்தது. அவைகளை யடையவேண்டுமென்று ஸ்திரீகள் பெரு முயற்சிகள் செய்துவந்தார்கள். என்றாலும் பிரகிருத யுத்தத்திற்கு முன்வரை அவர்கள் எண்ணம் நிறைவேறுவது முடியாது போலத் தோன்றிற்று. ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் புருஷர்கள் எல்லோரும் படைகளிற் சேர்ந்து போருக்குப் போக நேரிட்டது. அவர்கள் இதுவரை செய்து வந்த வேலைகளை யெல்லாம் ஸ்திரீகளே செய்யவேண்டியிருந்தது. அவ்விதம் மிக வுற்சாகமாகவும் நன்றாகவும் சமஸ்தமான வேலைகளையும் செய்ய ஸ்திரீகள் முன்வந்து தங்கள் யோக்கியதையை நன்றாக நிரூபித்து விட்டார்கள். அதற்குப் பயனாக, ஸ்திரீகள் ஸொலிஸிடர் 'வக்கீல்' வேலைக்கு வரலாம் என்று பார்லிமெண்டில் ஒரு சட்ட மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் சட்டமாகிவிடும். யுத்த முடிவில் 30முதல்35வயதுக்குமேற்பட்ட ஸ்திரீகளுக்கு பார்லிமெண்டுக்கு பிரதிநிதிகளை அனுப்பும் பாத்தியம் கொடுக்கவேண்டுமென்று பார்லிமெண்டில் "காமன்ஸ்" என்ற சபை அக்கிராசனபதியால் நியமிக்கப்பட்ட கான்பரன்ஸில் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விதமான ஆச்சரியகரமான மாறுதல்கள் இவ்வளவு சீக்கிரம் நேரிடுவதற்கு யுத்தம் தான் காரணம். ஸ்திரீகளுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பது இக்கோர யுத்தம் பிரவர்த்தித்ததின் உள்நோக்கங்களில் ஒன்றாயிருக்குமோ என்னவோ? யார் அறிவார்?

*
* *

பாரத வர்ஷத்தில் இருக்கும் நாம், மேற்கூறிய மாறுதலைப்பற்றி நினைக்கும் எண்ணங்கள் யாது? கலிமுற்றிப் போய்விட்டது, காலம் கெட்டுப் போய்விட்டது என்று தெருத் திண்ணையிலாவது சாய்மான நாற்காலியிலாவது உட்கார்ந்துகொண்டு சொல்லிக் கொண்டிருந்தால் போது

மா? பல தொட்டிகளில் தண்ணீரைக் கொட்டி, அவைகளு க்கு அடியில் ஒன்றுக்கொன்று குழாய்கள் மூலம் சம்பந்தம் ஏற்படும்படி செய்தால், அத்தொட்டிகளில் நிரப்பிய தண்ணீரானது ஒரே மட்டமாயிருக்கும் என்பது யாவரும் அறிந்த விஷயம். முற்காலத்தில் ஒவ்வொரு தேசமும் துண்டு துண்டாக விசேஷ சம்பந்தம் இல்லாமலிருந்தது ஆனால் தற்காலத்திலோ போக்குவாவுக்கு சௌகரியங்களான புகை வண்டிகளும் புகைக் கப்பல்களும், தேசங்களுக்கிடையில் உள்ள தூரத்தை குறைத்துவிட்டன. சாதாரணத் தந்தியும், கம்பியில்லாமல் ஆகாயமார்க்கமாகவே செல்லும் "தந்தியும்" ஒரு தேசத்தில் நடக்கும் சங்கதிகளை அடுத்த சில நிமிஷங்களில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் தேசங்களில் தெரியும்படி செய்கின்றன. யுத்தத்தின் முடிவில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள 3,000 மைல் தூரத்தை ஆகாயமார்க்கமாய் சிலமணி சாவகாசத்துக்குள் கடக்க முடியும் என்று சாஸ்திரநிபுணர் சொல்லுகிறார்கள். இத்தகைய சம்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதால் ஒரு தேசத்தில் நேரிடும் மாறுதல் இதர தேசங்களை பாதிக்கமாட்டாதென்று சொல்ல இடமில்லை. மேற்கூறிய திருஷ்டாந்தத்தில பற்பல தொட்டிகளில் உள்ள தண்ணீரானது ஒரே மட்டமாய் நிற்க முயலுவது போல், மற்ற பல தேசங்களிலுள்ள நாகரீகங்களும் ஒன்றையொன்று மாற்றவும் கலந்து ஒற்றுமைப்படவும பார்க்கும், என்று தெளிவாகிறது. ஆகையால் மேனாட்டில் நேரிடும் மாறுதல்கள் நம்மை பாதிக்காதே. நாம் அதைக் கவனிக்க வேண்டிய அவசியமென்ன? என்று எண்ணல் அடாது மேற்கூறிய மாறுதல் நலமோ அல்லது கெடுதலோ எப்படியிருந்தாலும் இந்தியாவிலும் அம்மாறுதலுடைய பிரயோஜனம் ஏற்படாமலிராது. ஸ்திரீகளுடைய உரிமைகள் அதிகமானல் அவர்களுடைய உத்தரவாதமும் அதிகரிக்கும். எங்ஙனம் புருஷர்கள் தேச க்ஷேமத்திற்காக உழைக்கிறார்களோ, அங்ஙனமே ஸ்திரீகளும் தேச க்ஷேமத்திற்கு அனுகூலமான காரியங்களில் பிரவிர்த்திப்பார்கள். அது நல்லதா அல்லது கெட்டதா? ஸ்திரீகளே பிரவிர்த்திசெய்

தால்தான் நடக்கக்கூடியதாயுள்ள சில கைங்கரியங்கள் உண்டு. அவைகளில் அவர்கள் முயலவேண்டியதவசியமில்லையா? பம்பாயிலும், புனாவிலும், பங்களூரிலும் ஸ்திரீகளுடைய அக்ஞானத்தையும் வியாதிகளையும், விலக்குவதற்காக உழைத்துவரும் ஸேவாஸதநங்கள் அந்நகரங்களிலுள்ள ஸ்திரீகளுடைய தேசபக்திக்குச் சான்றாக விருக்கின்றன. மேலும் சென்ற மாதப் பத்திரிகையில் பிரஸ்தாபித்தபடி பம்பாயிலிருந்தும் சென்னையிலிருந்தும் மாதுசிரோமணிகள் ராஜப்பிரதிநிதியவர்களிடம் சென்று ஒப்பந்தக்கூலிஏற்பாட்டை நிறுத்தலவசியம் என்று தெரிவிக்கவில்லையா? அவர்களை ஆதரவுடன் உபசரித்து, அவர்கள் கோரிக்கையை ராஜப்பிரதிநிதியவர்களும் அளிக்கவில்லையா? இந்தியாவிலிருந்து கூலிகளை வெளிநாடுகளுக்கு கூட்டிப்போவதை மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்கள் நிறுத்திவிட்டார்கள். இதற்குமேற்கூறிய இந்திய புத்திரிகளின் முயற்சியும் காரணமல்லவா? ஆகையால் ஸ்திரீகள் முன்னைவிட பொது ஜன காரியங்களில் உத்தரவாதத்தை வகித்தலவசியம் என்றே ஏற்படுகிறது. மேனாட்டில் ஸ்திரீகள் மன்றாடிக் கேட்கும் உரிமைகள் இந்நாட்டில் ஸ்திரீகளுக்குக்கிடைக்கினும் என்ன தீங்கு நேரிடுமோ என்று பயப்படக்காரணமில்லை.

*
* *

தேசபக்தி, தெய்வபக்தி, பொறுமை, அன்பு, பரோபகாரசிந்தை, இவைகளில் புருஷர்களை விடவும், இதர தேச ஸ்திரீகளை விடவும் மிகவும் சிறந்த இந்திய மாதர்கள், தங்கள் சகோதரிகளின் அறிவின்மையையும், வியாதிகளையும் ஒழித்தலிலும் இதர பரோபகார கைங்கரியங்களிலும் பிரயத்தினப்படுவார்களேயொழிய, சுயநலம் பாராட்டி திரவியம் தேடும் வழிகளில் முக்கியமாகப் பிரவேசிக்கமாட்டார்கள். புருஷர் செய்யும் ஒவ்வொரு வேலைகளிலும் போட்டி போடுவதும் குடும்பத்துக்கு ஊதியம் தேடுவதும் ஸ்திரீகள் முதற்கடமை யல்லவென்றும், குடும்பத்தை நிர்வகிப்பதும், குழந்தைகட்கு அன்புடன் வித்தை கற்பிப்பதும், வியாதிஸ்தருக்கு கருணையுடன் சிகித்ஸை செய்வதும், ஸ்திரீகளு

டைய முதற்கடமையாகும், என்றும், இந்திய ஸ்திரீ படித்திருப்பதால் அவளுடைய சுபாவமான அன்பு, நாணம், பாதிவிரத்யம் முதலிய சிறந்த குணங்களை யிழக்கவேண்டியது இல்லை யென்றும், மேற்கூறிய குணங்களே ஸ்திரீகளுக்கு மேன்மையான அழகைச்செய்கின்றனவென்றும், உலகத்தார் எவர்க்கும் நிரூபித்துக் காட்டும் பாக்கியத்தை இந்திய ஸ்திரீகள் பெற்றிருக்கிறார்கள். ராஜஸகுணம் நிறைந்த மேனாட்டு ஸ்திரீகளின் சுறுசுறுப்பையும், வித்தையிலுள்ள ஆவலையும் இந்திய ஸ்திரீகள் பெற்று தங்களுடைய சுத்த சாத்விக குணத்தால் அந்த பரப்பரப்புடைய கெடுதல்களை மாற்றி நலத்தைமட்டும் கிரஹிப்பார்கள். படிப்பினாலாவது அல்லது, அதிக உரிமைகளைப் பெறுதலினாலாவது இந்திய ஸ்திரீகள் தங்களுடைய சுபாவமான நற்குணங்களை யிழப்பார்கள் என்று நாம் நினைக்கக் காரணமில்லை.

***

சென்ற மார்ச்சுமீ 8-ம் தேதி யன்று பம்பாயில் ஸ்ரீமான் ஜி. பி. வைத்தியா அவர்கள் செய்த பிரசங்கத்தில் போர்ச்சுகல் பாதிரிமார்களால் கிறிஸ்தவர்களாக்கப் பட்ட அநேக ஹிந்துக்களை சுமார் 100 வருஷத்துக்குமுன் மறுபடி ஹிந்துக்களாக மாற்றப்பட்டது என்று சொன்னார், ஒரு மஹம்மதியன் ஹிந்துவாக மாற இஷ்டப்பட்டு தனக்கு ஒரு கடிதம் எழுதி யிருப்பதாகவும் சொல்லி அந்தக் கடிதத்தையும் படித்துக் காண்பித்தார்.

***

கல்வியின் அவசியத்தைப் பற்றி விசேஷமாகக் கூற வேண்டியதில்லை என்றாலும் எவ்வாறு ஆகாரம் முக்கியம் என்று எண்ணி அதை சம்பாதிக்க முயலுகிறோமோ, அவ்விதமே நாம் கல்வியைப் பெற முயலுகிறோமா? எவ்வளவு ஜனங்கள் கையெழுத்துக் கூடப் போடத்தெரியாதவர்களாயிருக்கிறார்கள்? எத்தனை குழந்தைகள் பள்ளியில் பயில வேண்டிய காலத்தில் அப்படிச் செய்யாமல் வேலை செய்யப் போய்க்கொண்டும் அல்லது விளையாடிக்கொண்டும் இருக்கிறார்கள்? சம்பளமில்லாமல் எழுதப்படிக்ககற்பிக்கும் பள்ளிகள் எவ்வளவிருக்கின்றன என்று பார்ப்போமானால் இந்தி

யாவில் அவைகள் மிகச் சொற்பமாக இருக்கின்றன. அவைகளில் பயிலும் மாணுக்கர்கள் தொகையும் மிகவும் குறைந்தது. ஆனால் இதர தேசங்களில் கல்வி விஷயத்தில் என்ன முயற்சி செய்கிறார்கள் என்று பார்ப்போம்.

* * *

"இங்கிலாந்தில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வயதுள்ளவர்கள் 13-ல் ஒருவர் மட்டும் ஹைஸ்கூல் அல்லது உயர்தரப் படிப்புப் பெறுகிறார். மற்ற பன்னிரண்டு பேர்களும் அவ்விதமான பாக்கியம் பெறாததால் இங்கிலாந்தில் சில சமயங்களில் தேசபக்திக் குறைவையும், வேலைத் திறமைக் குறைவையும் பார்க்கிறோம். ஆகையால் எல்லாரும் உயர்தரப் படிப்புப் பெறும்படி செய்யவேண்டும்" என்று வில்சன் என்ற ஒருவர் இங்கிலீஷ் பத்திரிகை யொன்றில் எழுதுகிறார். பிரதமக் கல்வி விஷயத்திலோ எல்லாச் சிறுவர் சிறுமிகளும் எழுதப்படிக்க கற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இம்மட்டோ? வீட்டில் சரியானபடி ஆகாரம் இல்லாமல் மெலிந்திருக்கும் குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்துவது முடியாதாகையால், ஆகாரமில்லாக் குழந்தைகளுக்கு ஆகாரம் போடுகிறார்கள். 48 பள்ளிக்கூடங்களில் 90,000 குழந்தைகளுக்கு வைத்தியம் செய்யவேண்டியிருந்ததாம். அவர்களில் பள்ளிக்கூடச் செலவில் 56,000 குழந்தைகளுக்கு வைத்தியம் செய்ததாகவும், அவர்களில் 31,000 குழந்தைகளுக்கு முழுதும் சௌக்கியமானதாயும், 19,000 குழந்தைகளுக்கு கொஞ்சம் குணமாயிற்று என்றும் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் படிக்கிறோம். பல பள்ளிக்கூடங்களில் பல் வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்திருப்பதாயும், சில பள்ளிகளில் சரீரத்துக்குள் இருக்கும் அவயவங்களையும் எலும்புகளையும் புகைப்படத்தில் காட்டக்கூடியதும் சரீரத்துள்ள வியாதிகளை சௌக்கியம் செய்யக் கூடிய "எக்ஸ்" வெளிச்ச யந்திரமும் வைத்திருப்பதாயும் தெரிய வருகிறது. இவ்வளவும் போதாது, குழந்தைகளுக்கு இன்னும் சௌகரியங்கள் செய்யவேண்டும் என்று ஆங்கிலப் பத்திரிகைகளில் முறையிடுகிறார்கள்.

இதையெல்லாம் உத்தேசித்து, இந்தியாவில் எவ்வளவு சீர்திருத்தங்கள் தேவையாயிருக்கின்றன. அவைகள் விஷயமாய் போதுமான ஆவலுள்ளவர்களாக நாமிருக்கவில்லை. ராஜாங்கத்தாரால் செய்யவேண்டிய முயற்சிகள் அநேகமிருக்கின்றன. இருந்தாலும், சற்று ஜனங்களுடைய பொறுப்பைப் பற்றி கவனிப்போம். எழுதப் படிக்க மட்டும் கற்பிப்பதற்கு வேண்டிய சாமக்கிரியை என்ன? பெரிய கட்டடங்களும், புஸ்தகங்களும், பலகைகளும் அவ்வளவு அவசியமில்லை. கிராமங்களில் காலியிடங்கள் கிடைப்பது சிரமமில்லை. அதன்பேரில் ஓலையால் கூரை போடுவது சுலபம். கிராமத்தார் இஷ்டப்பட்டால் செலவில்லாமல் முடியும். மணல் கிடைப்பது சிரமமல்ல. இத்துடன் எழுதப் படிக்க கற்றுக்கொடுக்க ஒரு உபாத்தியாயர் மட்டும் இருந்தால் கிராமத்திலுள்ள குழந்தைகளனைவரும் எழுதப் படிக்க கற்றுக்கொள்ளலாம். இப்மாதிரியே நகரங்களிலும் விசேஷப் பணச் செலவின்றி இராப் பள்ளிகள் வைத்து, ஏழைகளுக்கு கற்பிக்கலாம். மனமிருந்தால் வழியுண்டு. இக்காலத்தில் கைங்கரியம் செய்யவேண்டுமென்ற அவாவானது வாலிபர்களிடம் மிகுந்துளது. அவர்கள் சங்கங்களாகச் சேர்ந்து ஒரு ஏற்பாடு செய்துகொண்டு தினமொருவராக 7 பேர்கள் ஒரு ஜதை மாணாக்கர்களுக்கு கற்பிக்கமுடியும். இவ்விதம் நம்மால் கூடியவரை முயன்றால் நம் நன்முயற்சியையும், ஆவலையும் மெச்சி, ராஜாங்கத்தாரும் எல்லாரும் சம்பளமின்றி கட்டாயமாய் பிரதமக் கல்வி கற்க ஏற்பாடு செய்வார்கள், பிரதமக் கல்வியே நம் நாட்டில் இவ்வளவு திண்டாட்டமாயிருக்கையில் உயர்தரக் கல்வியைப் பற்றி விசாரிப்பானேன்? எல்லோரும் உயர்தரக் கல்வி பெறும் பாக்கியம் இந்தியர் அடையும் காலம் எப்போது வாய்க்குமோ அறியேம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

பெண்கல்வி.

(424-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இனிக், கல்வியறிவில்லாத பெண்ணொருத்தி தன்னைக் கொண்ட மணமகனிடம் நடக்கு முறையோ, தன் நாயகனைச் சந்நியாசம் பெறச் செய்யுமென்பதற் கையுமில்லை. நாயகன் ஒன்று நினைப்பின் மற்றொன்று நினைப்பள் நாயகி. கணவன் ஓரதிதியை யேனும் தனக்கன்புள்ள அல்லது தன்னிடத் தன்புள்ள ஓர் நண்பனையேனும் மற்றும் எப் பெரியோரை யாயினும் உபசரிக்கக் கருதின் மனைவி எப் பொழுதும் அதற்கு மாறான கருத்துடையவ ளாகியே நிற் பள். கிருஹஸ்தனாகிய ஒருவன் அத்தகையளைத் துணையாகக் கொண்டு இல்லற தருமத்தை யிழுக்கற நடாத்தத் துணிதல் நாயின்வால் பற்றி நதிகடத்தலை யொக்குமேயன்றி வேறல்ல. ஒரு தட்டுப் பொருளுடையதாகவும் மற்றொரு தட்டு வெறுமை யினதுமாகிய ஓர் தராசு எங்ஙனம் சமநிலையில் நிற்கும்? அது போற் காதலன் கல்வியறிவும் அதற் கேற்ற குணவமைதியும் பொருந்தப்பெற்றவனாயிருந்து காதலி அவ்வாறமைந்தில ளாயின் இருவரெண்ணங்களும் ஒன்று கீழிருக்கவும், ஒன்று மேல் நோக்கவுமாகவே நிற்குமன்றி ஒருபோதும் ஒற்றுமைப்படுத லியலாது. இப்படிப் பட்ட கல்வியறிவில்லாத காதலியைத் தன் காதலன் யாவேனும் பணியேவு வானாயின் அவனை யெதிர்த்துக்குறுகுறுத்த பார்வையும் மொறமொறத்த நெஞ்சும் முணு முணுத்த வாயுமுடையளாயன்றோ செல்லத் தலைப்படுகின்றாள்? சிலர் தம் கணவர் வினவும் வினாக்கட்கு உத்தரவுமின்றி யூமையாயிருந்து விடுகின்றனர். சிலர் தம் நாயகர் செய்யும் தொழில்கள் தமக்கு வெறுப்புடையன வாகத்தோன்றுமாயின் அது காரணமாகக் கொண்டேனும் அன்றி, அக்கணவர்மீது தம்

அதிகாரத்தைச்செலுத்த வேண்டுமென்னும் கர்வத்தோடே னும் அவரைத் தமக்குத்தோன்றிய வாறெல்லாம் திட்டி வாயில்வந்தனவற்றையெல்லாம் பிரயோகித்துக் கணவரைத்தம் காற்கீழொதுக்கி அடிமையாக்கக் கருதும் பேயறிவாளராகவுள்ளர். இப் பேதையாரியற்றும் இத்தகைய செய்கைகட்குட்பட்டு அவர்கூறு மவமொழி யாவுமமிர்த மெனக்கொண்டு அவரிட்ட பணி தவருதியற்றித் தாமீட்டுந் தனத்தையும் அவர் கரத்திற்கொடுத்துத் தமக்குப் பொருள் வேண்டும்போது உடையார் முன் இல்லார் போல் ஏக்சற்று அவரருள் பார்த்து நிற்கும் ஆர்ந்த அறிவாளர் சிலரும் யாவரும் பார்க்க இவ்வுலகின்கண் ஊடாடித்திரியும் வியப்பே வியப்பு! அன்னோரைப்பற்றி யாம் ஈண்டு யாதேனும் கூற வந்தேமல்லம். ஆதலின் அஃதோர் புறங்கிடக்க. அரிவையர் கல்வியறிவுடையராயின் தம் கணவர்தமக்கு வயப்படுந்தன்மையுடையராயும் எவ்வளவோ பேதமை நிறைந்தோராயுமிருப்பினும், அவரிடத்தும் பக்தி விரவிய அன்புமிகப்பூண்டு அவர் காலாலேவிய பணியைத் தலையாலியற்றியும், அவரது நாவிற்றோன்றிய ஒவ்வொரு மொழியையும் பொன்போற் போற்றியும் குற்றேவல் யாவும் குறைவறச் செய்தும் அவரின்புறத் தாமின்புற்றும் அவர் துன்புறத் தாமுமுறுந் துன்பத்தை வெளிக்காட்டாது மறைத்துத் தம் கணவரைத் தேற்றியும் அவர் குறிப்பறிந் தொழுகியும் இவ்வாறு பல விதத்திலும் கணவனைக் களிப்பிப்பதிலேயே கண்ணும் கருத்தும் கவலையுமுடையவளாய் என்றும் அவர்க்குப் பரிந்து நடக்கும் பான்மையளாவாள் என்பது மாத்திரம் ஈண்டுநாம் கவனிக்கத்தக்க விஷயமாம். மூன்றெழுத்துமிரண்டரை மாத்திரையுமுள்ள தோர் பதமாகிய கல்விக்கு ஆ! எத்தகைய சக்திவாய்த்துளது என்பதைச் சிறிதாராயின். ஆகவே கல்வி யறிவின்மையால் வந்த புல்லிய தன்மையாலும் உள்ளச்செருக் காலுமன்றோ பலவிதப் பேய்க்குணங்களும் நாய்க்குணங்களும் சிலபெண்கள்பாற் பெருவேரூன்றியுள்ளன. இத்தகைய வேரைக்கல்லுதற்குக் கருவி

யாக வுள்ளமையே வித்தைக்குக் கல்வி யென்றொரு பெயர் வழங்குதற்கு மற்றொரு காரணமுமாம். ஓர் கற்றறிந்த பெண் தான் வாழ்க்கைப்பட்ட விடத்தில் ஒருகுற்றத்திற்கு மிடமின்றிக் குடும்பத்தை நிர்வஹித்துப் பாதுகாப்ப தெவ்வாறென்று நன்கறிந்தவளாய்க் குடும்ப விஷயத்தில் கணவனது கவனத்தையும் சிரமத்தையும் ஒழித்துத்தானே மேற் பார்த்துத் தன் கணவன் மனம்மாறுபடாமல் எல்லாக்காரியங்களையும் குறைவற நிறைவேற்றிவரும் திறமை வாய்ந்தவளாகின்றனள்.

அதுவன்றிச், சாத்திரவுணர்ச்சி யில்லாமல் இவ்வுலகில் திரவியத்தைப் பாதுகாத்து ஜீவ்யமுறையை ஒழுங்காக நடத்துவது தானெங்ஙனம் சாத்தியமாம்? பொருளில்லார்க்கிவ் வுலகமில்லை என்றபடி இவ்வுலகவாழ்க்கைக்கு இன்றியமையாதது பொருளே யாதலால் 'பொருள்தனைப் போற்றி வாழ்' என ஆன்றோர் கூறியபடி ஒவ்வொருவரும் பொன்னைக் கண்ணைப்போல் பாதுகாத்தல் வேண்டு மென்பது முக்கியம். உலகிற் பொருளுடையாராய்ப் பிறத்தலே மிகவரிது. அப்பொருளைப் பேணிப் பாதுகாக்கும் தன்மை வாய்ப்பது அதனினும் மிகவரிது. ஆதலால் திரவியத்தை மட்டாக வரையறுத்துச் செலவழிக்கும் முறையும் நன்மார்க்கத்தில் உபயோகிக்கும் ஒழுங்கும் கற்றறிவினர் பாலன்றி ஏனையோர் பாற்சிறிது முண்டாகாவென்று நன்கறிக. ஆதலின் பெண்கள் கல்வி ஞானம் பெற்றிலரேல் பொருளழிவு செய்யவும் முறை சிறிதும் அறியாராய் மிதமிஞ்சிய செலவு செய்தும் தாம் அங்ஙனம் செய்யத்தம்மிடத்துப் பொருளில்லை யாயினும் தம்கணவரையாவது அவ்வாறு ஏராளச் செலவு செய்யும்படி தூண்டியும் முடிவில் தம் நாயகரையும் வறியராக்கிவிட்டுப் பின் வாளா வருந்துகின்றனர். அந்தோ! முட்டிவிட்டுப்பின் குனிந்து செல்வதைக் காட்டினும் முதலாவதே தலைதாழ்ந்து சென்றுசுகமடைவது மேன்மை யென்பதைக் கனவிலும் கருதாராகின்றனரே! மேலும் அன்றாடம்பொருளீட்டி ஜீவ்யம் செய்யும் இயல்புடையகணவரைப் பெற்ற சிலர், அவர் (அக்கணவர்)

வருந்தியுழைத்துச் சேகரித்துவரும் சிறு பொருளினையும் தம்மறிவீனத்தால் கண்டவாறு செலவிட்டு அவரை அன்னமுமிடா தடித்தோட்டக் கருதுகின்றனர். கிடைத்த பொருளில் திருப்திகொண்டு வ நவாய்க் கேற்ற செலவிட்டு இல்வாழ்க்கையை இனிது நடாத்தும் இயல்புடையாளும் உள்ள பொருளை நல்வழியிற் செலவு செய்தும் நாயகனையு வந்துபசரிக்கு மியல்புடையாளுமே நற்றகைவாய்ந்த நாயகியாவாள்.

இதுவன்றி ஆங்கிலம் கற்ற பெண்கள் சிலர் இக்காலத்து உள்ளத் தருக்குடையராய்த் தம்கணவர் எந்நிலையிலுள்ளா ராயினும் அதனைச்சிறிதும் கருதாராய்ப் பட்டுடைக்கும் பொன்னகைக்கும் போராடுகின்றனர் அன்றோ? தாம் கற்ற கல்வியின் பயன் இதுதானோ? இத்தன்மையனவான தீக்குணங்களை யெல்லாம் வித்தை யென்னும் கோடரியால் வேரோடறச் செய்யவேண்டும்.

இஃது இங்ஙனமிருக்க உலகில்நாகரிகம் தலை யெடுக்கவேண்டு மென்றும் நாகரிகத்தோடு வாழவேண்டுமென்றும் பெரும்பாலருடைய கொள்கையுமாம். கல்வியின்றி நாகரிகம் எங்கிருந்துவரும்? வித்தின்றிச் செடிமுளைப்ப தெங்ஙனம்? மேனாட்டார் எதன்மூலமாக நாகரிக மடைந்தன ரென்பதைச் சிறிதாராயுங்கள். மேல்நாட்டு ஸ்திரீகள் தாங்களாகவே வரைந்த புதுப்புத்தகங்கள் எத்தனையோ நாம் கண்கூடாக் காண்கின்றோம். இதுகாறும் நம்நாட்டுப் பெண்களாலியற்றப்பட்ட நூல்களெவையேனும் உளவா? ஐரோப்பியஸ்திரீகள் தாங்கள் இளமையிலிருந்தே நன்கு கற்று நூல்வரையும் திறமையும் பிரசங்கத் திறமையும் விரைவில் வாயப் பெற்றுத் தாம் யாங்கியாங்குச் செல்கின்றனரோ ஆங்காங்கெலாம் பொது ஜனசமூக சம்பந்த மாகவோ மத சம்பந்தமாகவோ நல்லவிஷயங்களைத் தேர்ந்தெடுத்து வாக்சாலத்தோடு பிரஜைகளின் மனதைக்கவரும் வண்ணம் பிரசங்கித்தும் பூர்வீக சரித்திரங்களையும் உலகிற்குபகாரமான விஷயங்களையும் எழுதி வைத்துப் புத்தக ரூபமாக

வெளியிட்டும் தேசத்திற்கு எவ்வளவோ நன்மைகள் புரிந்து வருகின்றனர்.

இந்தியமாதர்களே! இனியேனும் விழிமின்! எழுமின்! பூவிற்குதவியைப் புரிமின்! மாது சிரோமணிகளே! இக் கல்விவிஷயத்தில் இன்னும் நுங்கட்குப் பொறுமை யுண்டாகாத தென்னே! கற்றலிற் கொள்ளும் பொறுமைக்கு மாத்திரம் கணக்கில் பயனுண்டாம் என்பதை நன்கறிவீராக.

நாம் உலகிற் பிறந்த பயனாவது கற்றுப்பிறர்க் குரைத்துக் கற்றவழி நின்று பிறரையும் அவ்வழிப் படுத்தலன்றோ? 'தனக்கென வாழான் பிறர்க்குரியாளன்' என்றபடி நாம் இவ்வுலகின்கண் வாழ்வது நம் சுயநலத்தையடைதற்கல்ல. தன்னலமொழித்துப் பரநலங் கருதுபவ ரெவரோ அவரே பரோபகாரி யெனப்படுவர். உலகையுயர் நிலையடையச் செய்தற்குக் காரணமாயிருப்பது உபந்நியாசமே. அவ்வுபந்நியாச சக்திபெறுதற்குக் கல்வி யின்றியமையாததாகும். ஆதலால் அப்படிப்பட்ட கல்வியை ஸ்திரீயும் கற்றிருந்தால் அவளும் அவளது கணவனுமாகிய இருவரும் சேர்ந்து பற்பல விடங்களிலும் சென்று உபந்நியசித்தலாலும் தினப்பத்திரிகை மாதப் பத்திரிகைகள் மூலமாக தத்தம் அபிப்பிராயங்களையும் மற்றும் நல்லவிஷயங்களைப் பற்றியெழுதுதலாலும், தாமே அறிவு நூல்களை யியற்றி வெளியிடுதலாலும் தேசநன்மைக்காக உழைக்கலா மல்லவோ? இவ்வாறு இவ்விருவராகச் சேர்ந்து நாடு நன்மையடையப் பாடுபடுவராயின் நம் தேசம் எவ்வளவு விரைவில் முன்னேறும் என்பதைப்பற்றி யாம் கூறவும் வேண்டுமா?

தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்றவாறு பரோபகாரசிந்தை யுடையவர்களாய்த் தாம் கற்ற கல்வியைப் பலர்க்கும் பயன்படுத்தித் தம்மாலியன்றவுதவியையும் உலகிற்குச் செய்து புகழைப்பெறுக. தன்னால்

உலகப்பிரயோஜனம் யாதுமின்றி நடைப்பிணம்போல் வாளா திரியும் ஒருவன் அல்லது ஒருத்தி ஈண்டுப்பிறப்பதைக் காட்டிலும் பிறவாமை நன்று. புகழுடம்பே என்றும் அழியாதது என்று கருதி அதனை நிலைநிறுத்தற்கு வேண்டிய முயற்சியைக் கைக்கொள்க.

"கல்வியானது அறம் பொருள் இன்பமும் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும், உறுங்கவலொன்றுற்றுழியும், கைகொடுக்கும், ஆதலால் சிற்றுயிர்க்குற்ற துணைகல்வியினூங் கில்லையாம்". இஃது ஆடவர்க்குமாத்திரமல்ல. பெண்டிர்க்கும் அத்தகையதேயா மென்க.

கற்கக்கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.

என்ற நாயனர் வாக்கையும் நன்குணர்ந்து அதன் போதனைப்படி நடந்தாலே யாவரும் போதம்பொருந்தியேதமில் லின்ப மென்று மடையாநிற்கலாம்.

முற்கூறியவாறு ஸ்திரீகள் யாவரும் கற்றுத்தேர்ந்து உலகத்தை யுய்விக்கக் கடமைப் பட்டவர்களா யிருக்கத் தற்கால நிலைமையானது, யாவரேனும் தங்கள் முன்னிலையில் உபந்நியசித்தால் அதையறிந்து கொள்ளு மறிவு மிலராய் விழித்துக்கொட்டாவியிடும் பருவத்திலுளது. இஃது எவ்வளவு விசனிக்கத்தக்கது! நிற்க.

இனி உலகின்கண் கற்ற பெண்மணி ஒவ்வொருவருக்கும் மனைவியாக அமைவது துர்லபம். ஆதலால் ஒருவன்கல்வியில்லாத ஸ்திரீயை மணம்புரிய நேர்ந்தாலும் அம்மணமகனாயினும் தான்கொண்ட அம்மனைவியைப் படிப்பித்தற்குரிய முயற்சிகளைச் சிறிதும் சோர்வின்றித் தேடல் வேண்டும். 'எறும்பூரக்கல்லும் குழியும்' என்றபடி சிறிதுசிறிதாகச் செய்யுமுயற்சி முடிவில் பெரும்பயன் விளைக்கும் என்பதற் கியாதோரையமுமில்லை.

அநேக தாய்தந்தையர் தம்பெண்கள் படிக்கும் பருவமடைந்த பொழுதும் அப்பெண்கள் தர்மைவிட்டகன்ற

(மணவினைமுடிந்த) பின்னர் யாங்ஙனம் கற்பார்களென்னும் தம்மிடத்திலிருக்கும் வரை கற்கும் சொற்ப வளவினதாகிய கல்வியாற் பயனியாதென்றும் கருதியும் அங்ஙனமே வெளியிற் சொல்லிக் கொண்டும் அவர்களைப் படிப்பியாதிருக்கின்றனர். இங்ஙனம் பெண்கள் கணவரிடத்துச் சென்றபின் அவர்களது கல்விக்குத் தடையும் குறையும் உண்டாமென்றும் ஆதலால் இப்பொழுது அவர்களுக்கு ஏன்கல்வி பயிற்றுவதில் நாம் வீண்பிரயாசைப் படவேண்டுமென்றும் எண்ணுபவர் தாம் அச்சிறுமியர்க்கு ஆரம்பத்திலிருந்தே கற்பிக்கும் வழியறிந்து கற்பித்து அவர்கட்குக் கல்வியில் ஓர் வித ஆனந்தமும் அவாவுமுண்டாகும்படி செய்து வந்தால், இம்முறையில் கற்றுவந்தபெண்கள் தமக்கு விவாக சம்பவம் நேர்ந்து தம் கணவரிடத்துச் சென்றபோழ்தினும் அங்குத்தமக்குள்ள வீட்டுக்காரியங்களை யெல்லாம் ஓர் முறைப்படுத்தித் தம்கல்விக் கிடையூறின்றி ஒவ்வொரு வேலைக்கும் தக்ககாலஅளவு நிர்ணயித்துக் கொண்டு தாம் முன் பெற்றோரிடத்திருந்த பொழுது கற்ற கல்வியை அம் மட்டோடு விட்டுவிடாது இடையறாது பயின்று அக்கல்வியை யபிவிருத்திசெய்ய முயல்வர் என்பதை நன்குணர்வாராக. அன்றியும், தேனின் சுவைசிறிதறிந்தசிறூர்கள் அடிக்கடி அத்தேனை மறவாமலிச்சிக்கு மாறுபோல கல்வியின் சுவையறிந்த பெண்கள் அதனை யெஞ்ஞான்றும் மறவாமற் கற்க விருப்புறுவர். தவிர அப்பெண்கள் தாம் கற்கும் கல்விக்கிடையூறுகள் பலவியற்ற யாவர் துணிந்தாலும் அல்லது அவ்விதமான வேறெந்தச் செயல்கள் தம்மெதிர்ப்படினும் தாம் அவற்றிற்குட்படாது வென்று தம்முயிரிறுதிகாறும் கல்வியைக் கைநழுவ விடாது கற்பர்.

(இன்னும் வரும்)

டி. யம். மொகயதீன் கவிராயர்.

ஆத்மபோதம்.

(442-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ரந்திதேவர்:-இத்தீர்த்தத்தையும் கொடுத்த பிறகு எனக்குள் என்னையறியாது ஓர் ஆநந்தமுண்டாகிறதே. இச்சண்டாளனையும் நாய்களையும் பார்க்கும்போது என்மனது என்னையறியாது வணங்குகிறதே. என்னிஷ்டதேவனாகிய ஸ்ரீ லக்ஷ்மீகாந்தன் தான் இவ்விதம் வந்து சோதிக்கிறாரோ நல்லது பார்ப்போம். அப்பா நீயார்? உன்னைப் பார்த்தால் வேறுவிதமாகத் தோன்றுகிறது. நீ உண்மையையும் புகல்வாய். இல்லாவிட்டால் நான் பிராணத்தியாகம் செய்துகொள்வேன்.

யோகி:—உடனே பகவான் தன் நிஜஸ்வரூபத்தைக் காட்டி வேண்டிய வரங்களைத் தருவதாயும் அவன் மஹா உத்தம பக்தனென்றும் புகன்றார்.

மஹாவிஷ்ணு:—ஹே! ரந்திதேவா, இப்பொழுது யான் யாரென்று பார். உன் பக்தியை சோதித்தல் பொருட்டே நாங்களிவ்வாறு செய்தோம். யான் இப்பொழுது மிகவுமானந்தத்தை யடைந்திருக்கிறபடியால் உனக்கு வேண்டியவரங்களைக் கேட்பாய். முன் உனக்குபதேசம் செய்தது யானே. முதல் முதல் யாசகம் செய்த பிராம்மணன் தேவர்கோனே. இரண்டாவது வந்தவர் பிரமனே. நீ எல்லோருடைய அநுக்கிரஹத்தையும் பூரணமாய்ப் பெற்றிருக்கிறாய். ஆகையால் என்னிடம் வேண்டினவற்றை உடனே கேட்டுக்கொள்.

ரந்தி:—ஹே! சர்வலோகசரண்யா! லக்ஷ்மீகாந்தா! லோகசம்ரக்ஷகா! எனக்கு தங்களிடத்துள்ள பக்தி குன்றாதிருக்கவும் லோகோபகாரமான விர்த்தி யெள்ளளவும் குறையாமலும், ஜனங்களிடத் தன்பு மாறாதிருத்தலுமே வேண்டுகிறேன்.

Supplement to Poornachandrothayam.

அறிக்கை.

தங்களுடைய சந்தாத்தொகைக்கு நாம் அனுப்பவேண்டிய சஞ்சிகைகளில், இந்த மாசத்தியது கடைசி சஞ்சிகை. இனி அடுத்தமீ முதல் ஒரு வருஷத்திற்கு சந்தாத்தொகை ரூ 2 மணி ஆர்டர் அனுப்பவேண்டியது தவறினால் அதை வசூலிக்க அடுத்த சஞ்சிகை வி. பி. பி. மூலமாய் அனுப்பப்படும். தயவுசெய்து பெற்றுக்கொள்ளவும். இப்பத்திரிகை வேண்டாமென்றால், பத்திரிகையின் மானேஜருக்கு முன்னரே தெரிவிக்கும்படியும். அடுத்த பத்திரிகை வருங் காலத்தில் வெளியூர்களுக்குச் செல்லும் சந்தாதார்கள் வி. பி. யில் அனுப்பிய சஞ்சிகை வாபஸ் வராதவண்ணம் தங்கள் மாற்று விலாஸங்களை அந்தந்தமீ 15உக்குள் தெரிவிக்கும்படியும் பிரார்த்திக்கப்படுகிறது.

மஹாவிஷ்ணு:—அப்பா ரந்திதேவா! உனக்கு வைகுண்டத்தில் வசிக்கப் பிரியமில்லையோ?

ரந்தி:—ஹே! சர்வவியாபியான பிரபோ! மன்னிக்கவேண்டும். எக்காரணத்தால் தங்களை தரிசனம் செய்யக் கிடைத்ததோ, அதை கைவிடாதிருப்பின் எப்பொழுதும் முடனிருப்பேன். அதுவே வைகுண்டம். ஆகையால் எக்காலத்தும் ஜனங்களுக்குநேரிடும் துக்கங்களை நிவர்த்தித்து அவர்களுக்காக நான் கஷ்டப்படுவதே எனக்குப் பேரானந்தம்.

மஹா:—நல்லது நீ இன்னும் சில காலம் ராஜ்யபாரம் செய்து பிறகு நம் சந்நிதி வந்து சேருவாய்.

யோகி:—அப்பா! எனது சிஷ்யர்களே! இதுவே பகவான் தீர்த்தத்தை ஏற்றுக்கொண்டு அநுக்கிரஹித்த சரித்திரம். இனியும் அச்சுலோகத்தின் சூக்ஷ்மார்த்தத்தைப் பிறகு சொல்லுகிறேன்.

துவாரத்தில் யாரோ வந்திருப்பதாகத் தெரிகிறது. அது யார்? சீக்கிரமே அழைத்துவா.

யோகி சுந்தரராஜம்.

நன்மொழி.

பிறருக்குக் கைங்கர்யம் செய்யவே உலகத்தில் ஜனித்தாய்; அரசாள அன்றும். உழைக்கவும் வருந்தவும் உனக்கு சரீரம்அமைந்ததேயன்றி, சோம்பித்திரியவும் பயனில் சொல் சொல்லவும் அன்றும். தங்கம் உலையில் போல் மனிதர் உலகில் தபிக்கப்பெறுகிறார். இறைவனிடம் பூர்ண அன்புபற்றி ஒருவன் நடைபெறுஞ்கில் அவன் கதி நிர்கதியே.

கிருஸ்துவின் ஒழுக்கமுறை நூல்.

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்).

17-ஆம் அத்தியாயம்

சரீர அமைப்பு (தொடர்ச்சி)

சகல ஜீவாத்மாக்களும் ஈசுவரனுடைய அம்சர்களென்று பகவத் கீதையில் சொல்லியிருக்கிறது. ஜீவாத்மாக்கள் லோகங்களில் அனேகவித அநுபவங்களை அடைவதற்காக, கல் முதலான ஸ்தாவர வர்க்கங்களிலும், மரம் செடி முதலான ஓஷதி வர்க்கங்களிலும், பசுமுதலான மிருக வர்க்கங்களிலும், கடைசியாகமானிட வர்க்கத்திலும், சரீரங்கள் எடுக்கிறார்கள். ஜீவாத்மாக்கள் ஸ்தாவர வர்க்கத்திலிருக்கும்போது அவர்களுக்கு ஸ்தூல சரீரம் தவிர வேறு சரீரம் இல்லை. அவர்கள் ஓஷதி வர்க்கங்களுக்கு வரும்போது ஸ்தூல சரீரத்துடன் இச்சா சரீரம் கொஞ்சம் உண்டாகிறது. அவர்கள் ஜந்து வர்க்கங்களுக்கு வரும்போது இச்சா சரீரம் பலப்படுவதுடன் மானஸ சரீரம் கொஞ்சம் உண்டாகி வர வர பலப்படுகிறது. அவர்கள் மனித வர்க்கத்தை யடையும்போது தான் அவர்களுக்கு காரண சரீரமுண்டாகிறது. மனித வர்க்கத்தை யடைந்த போது தான் ஜீவாத்மா ஈசுவரனுடைய கர்ப்பத்திலிருந்து பிறந்தவனாகவும் ஸ்வதந்திரமுடையவனாகவும் ஆகிறான். அதுமுதல் அவன் செய்யும் புண்ணிய பாப கருமங்கள் அவனைச் சேருகின்றன. அதற்குமுன் ஜீவாத்மா மற்ற வர்க்கங்களிலிருக்கும்போது ஈசுவரனுடைய கர்ப்பத்திலிருப்பதினாலே புண்ணிய பாப கர்மங்கள் அவனைச் சேரா. மேலே சொன்ன காரண சரீரமானது சாசுவதமான சரீரம். மனிதன் ஜனன மரணமாகிற சமுசார சாகரத்தைக் கடக்கும் வரை அச்சரீரம் நிலைத்திருக்கும். மனிதனுடைய மற்ற சரீரங்களான ஸ்தூல சரீரம் இச்சா சரீரம் மானஸ சரீரம் மூன்றும் ஒவ்வொரு ஜன்மத்திலும் அழிந்து போய்

நூதனமாய் உண்டாகும். இம்மூன்று சரீரங்கள் மூலமாய் மனிதன் அடையும் சகல போகங்களும் காரண சரீரத்தில் சாரும். அந்த அநுபவங்களின் காரணமாக ஒவ்வொரு ஜன்மத்திலும் கருமங்கள் நடைபெறும். இவ்விதம் அநுபவங்களுக்கு இருப்பிடமாய் காரண சரீரம் மனிதனுக்கு அமைந்திருப்பதுபோல் மற்றகீழ்ப்படையான வர்க்கங்களிலுள்ள ஜீவர்களின் அனுபவங்கள் எந்த இடத்தில் சாருகின்றன? அவைகளுக்கு ஏற்பட்டுள்ள சரீரங்கள் ஒவ்வொரு ஜன்மத்திலும் அழிந்துபோய் நூதன சரீரங்கள் உண்டாகின்றனவே. இதற்கு சமாதானம் என்னவெனில் மனிதன் தவிர மற்ற கீழ்ப்பட்ட ஜீவ வர்க்கங்கள் ஈசுவரனுடைய கர்ப்பத்திலிருப்பதாக முன்னமே சொன்னோமல்லவா? அந்த கர்ப்பத்தில் நுண்ணிய அணுக்களால் அமைக்கப்பட்ட ஒருவித கர்ப்பப் பைகள் காரண சரீரத்துக்குப் பதிலாக உதவுகிறது. அதாவது பிராணி வர்க்கங்களுக்கு ஒரு பையும் ஓஷதி வர்க்கங்களுக்கு ஒருபையும் ஸ்தாவர வர்க்கங்களுக்கு ஒருபையும் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு வர்க்கத்திலுமுள்ள எல்லா ஜீவாத்மாக்களின் அநுபவங்களும் சமஷ்டியாய் அந்தப் பையில் சேருகின்றன. அக்காரணத்தினுலே தான் ஒவ்வொரு வர்க்கத்திலுமுள்ள ஜீவர்கள் ஒரே மாதிரியாய் நடக்கின்றன. உதாரணமாக இந்தியாவிலுள்ள காகமானது எவ்விதமாய் கூடுகட்டுகின்றதோ அதே விதமாய் ஆபிரிகாவிலுள்ள காகமும் கூடுகட்டுகின்றது. அந்தப்பைக்குத்தான் சேர்க்கை ஆத்மா (Group-soul) என்று பிரஹ்மக்ஞான புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன ஒவ்வொரு பையிலும் உட்பிரிவுகள் உண்டு. அவைகளை எடுத்துச்சொன்னுல் மிகவும் விரியும். மேற்சொன்ன பைகளில் உட்பிரிவுகள் உண்டாக உண்டாக அதைச் சேர்ந்த ஜீவர்களின் தொகை குறைந்துவரும். கடைசியாக ஒரு உட்பிரிவுப்பை ஒரு ஜீவாத்மாவுக்கு மட்டும் உரித்தானதாக ஏற்படும். அந்த ஜீவாத்மா மனிதவர்க்கத்தை அடையும்போது அந்தப்பையா

ஊது கலந்து அதுவே காரண சரீரமாக அமையும். அப்போது தான் அவன் கர்ப்பத்திலிருந்து பிறந்தவனாகிறான்.

இவ்விதமாய் உண்டாகும் காரண சரீரமானது ஆரம்ப காலத்தில் மிகவும் மங்கலாய் யாதொரு தேஜஸ் இல்லாமலு மிருக்கும். அநேக ஜன்மங்களுக்குப் பிறகு ஜீவனுடைய நற்குணங்களும் ஞானமும் காரண சரீரத்திற்கு அதி தேஜஸ்ஸைக் கொடுக்கும். மனிதனுடைய சரீரங்களைப் பற்றி ஸ்ரீமான் லெட்பீடர் எழுதியிருக்கிற "மனிதனுடைய கட்புலனும் பாகமும் கட்புலனாகாத பாகமும்" Man visible and invisible என்ற புஸ்தகத்தில் நான்கு விதமான காரணசரீரங்களின்படங்களை வரைந்திருக்கிறார். அதாவது (1) காட்டுமனிதனுடைய காரணசரீரம். இதில் யாதொரு ஒளியுமில்லாமல் அதிக மங்கலாயிருக்கும். (2) சாமான்னிய மனிதனுடையகாரண சரீரம். இது முந்தினதைவிட அதிக அழகாயும் பிரகாசமாயும் இருக்கிறது. (3) ஞானியுடைய காரண சரீரம், இதில் அநேக வர்ணங்கள் ஜ்வலித்துக் கொண்டு முன் சொன்ன இரண்டு சரீரங்களைவிட அதிக அழகாயிருக்கிறது. (4) ஜீவன்முக்தனுடைய காரண சரீரம். இதின் தேஜஸ்ஸும் ஜ்வலித்துக் கொண்டிருக்கிற பலவர்ணங்களும் அழகும் எல்லாவற்றிலும் அதிக மேன்மையாயிருக்கின்றன. ஒவ்வொரு ஜன்மத்திலும் மனிதன்செய்யும் சத்கர்மத்தின் சாரம்மட்டும் காரண சரீரத்தில் சேர்ந்து மேற்சொன்ன தேஜஸ்ஸைக் கொடுக்கின்றது. அவ்விதம் தேஜஸ் அதிகமானால் அடுத்த ஜன்மங்களில் ஜீவன் சிரேயஸ் அடைந்து சீக்கிரம் முக்தியடைவான் ஆகையால் நாம் ஒவ்வொரு ஜன்மத்திலும் சத்கர்மங்களைச்செய்து காரணசரீரத்தில் நல்ல பொருளை சேகரித்து வைத்து சீக்கிரம் மேலான பதவியை அடைய வேண்டும்.

வி. வெங்குசாமி அய்யர்.

நக்ஷத்திர பிரகாசம்.

நக்ஷத்திரப் பிரகாசம் இப்போததிகமாய் ஜ்வலிக்கிறது. பட்டுக்கோட்டைத் தமிழ்சங்கத்தலைவர் அடியில் வருமாறு நமக்கு எழுதுகிறார்:—

ஐயா! ஸமீபகாலத்தில் ஆத்மவித்தையை இவ்வுலகினர்க்கு உபதேசிக்க இப்பூவுலகில் பரமாசாரியர் ஒருவர் அவதரிக்கப் போவதை ஸ்தூல லோகத்தில் ஏனைய நண்பர்களின் வாக்கினாலும் பத்திரிகை வாயிலாகவும் சிறிது காலமாய் தெரிந்து கொண்டாலும் சுமார் 2,3 மாதகாலமாய் ஸூக்ஷ்ம (மனோ) லோகத்தில் அநேகவிதமான காரியாதிகளால் இம்மகான் சீக்கிரம் அவதரிக்க ஆயத்தமாயிருப்பதை பலமுறையும் கண்டும் அடங்காவானந்த பேரவாவினால் என்னிடமுள்ள மனமொழி மெய்களை சமர்ப்பித்து அவர் திருவரவை எதிர்பார்த்திருப்பதுடன் தன் மட்டில்லாது பிறர் மாட்டும் உழைத்து அவர்களையும் இந்நன்னெறிக்குக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாத கடமை என்பதை முன்னோர் "காசமுறவுகலந்துண்ணக்கண்டேன்" என்ற முதுமொழிக்கிலக்காக மஹாகுருவின் திருவருள்ப்படி ஊழியமே நாம் செய்யும் கடமையென்று ஸத்தியமாய் ஏற்பட்டுவிட்டதால் இந்த நன்னெறியில் ஏற்படும் எவ்வித ஸங்கடங்களையும் ஸஹித்து சாந்தமும் ஊக்கமும் உறுதியுடன் கைக்கொண்டு தங்களைப்போலொத்த மிக்கரான தக்கோர்களின் விதிகளையநுசரித்து விகாஸமுறையில் நடக்க என்னையும் உதயநக்ஷத்திர சங்கத்தில் ஒரு எளிய மெம்பராக அங்கீகரித்து அதற்குள்ள சபைத்தலைவரின் கையெழுத்துப் பத்திரமும், யந்திரமும் இன்னம் இதுவரை வெளியான துண்டுப்பத்திரிகைகளும் புத்தகம் முதலியவும் மற்றும் நான் நடந்துகொள்ள வேண்டிய முறையும் பிறவும் ஆசீர்வதித்து அனுப்பவணக்கமாய் பிரார்த்திக்கிறேன். ஷை யந்திரத்துக்குள்ள ரூ1—0—0 (ஒரு ரூபாய்) இத்துடன் மணி ஆர்டர் செய்திருக்கிறேன். தங்கள் ஊழியன்,

R. A. சுப்பிரமணிய ஐயர்,
பிரஸிடெண்டு தமிழ்ச்சங்கம்,
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஜில்லா.

ஸ்ரீவைகுண்டம் நக்ஷத்திர சங்கக் காரியதரிசியவர்கள் தமது ஸபையார்கள் வாரந்தோறும் கூடுவதற்காகவும் ஓர் "நக்ஷத்திரப் புத்தகசாலை ஏற்படுத்துவதற்கும் ஓர்வீட்டின் மாடியை வாடகைக்கு அமர்த்தியிருப்பதாகவும், இருபது ரூபா பெருமானமுள்ள புஸ்தகங்கள் ஏற்கனவே கைவசமிருப்பதாகவும் இன்னும் எமதுவசமுள்ள தமிழ்ப்புத்தகங்களையும் வி. பி. மூலமாக அனுப்பும்படியாகவும் எமக்கு எழுதியுள்ளார்.

*
* *

தூத்துக்குடியில் மார்ச்சுமீ 11-ஆம் தேதி நமது பத்திரிகைக் காரியஸ்தர் பி. எஸ். ராமசுப்பையரால் "குமரகுருவிலாஸமும், உலக விகாஸமும்" என்பதைப்பற்றி ஓர் உபந்யாஸமும், மதுரை பிரஹ்மக்ஞானக்கிளைச்சங்கக் காரியதரிசியவர்கள் மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமசந்திரய்ய ரவர்களால் உதயதிசை நக்ஷத்திரசங்கம்" என்பதை பற்றி ஓர் உபந்யாசமும் நடைபெற்றன. ஆத்தங்குடி ஸ்ரீசுப்பராம ஐயரவர்களும் பெரியார் வருகையைப் பற்றி அச்சமயம் அழகாய்த் தமிழில் உபந்யசித்தார்.

*
* *

நம்மிடம் லோககுருவின் வருகையைப்பற்றிய நான்கு துண்டுப்பத்திரிகைகளும், இரண்டு சிறு புத்தகங்களும் விற்பனைக்குத் தயாராயுள்ளன. "தியானக் கிரம விஷயம்" என்னும் புத்தகத்தையும் நமது நக்ஷத்திர சங்கத்தார் உபயோகித்து வருதல் நலம்.

*
* *

கோயம்புத்தூரில் விவசாய கலாசாலைப் போதகர் ஸ்ரீமான் C. B. டாஸன் என்பாரும், தூத்துக்குடியில் ஸ்ரீமான் ஆஸ்கார் கெல்லர் எனபாரும், புதுக்கோட்டை ராஜதானியில் ஆலங்குடியில் உள்ள ஸ்ரீமான் கே. எஸ். ராமச்சந்திர ஐயரவர்களும் நம்மிடமிருந்து முன்னூறு நானூறு பத்திரிகைகளை மொத்தமாக வாங்கிப் பலருக்குக் கொடுத்து ஜகத்குருவின் வரவை பிரசித்தப்படுத்தியிருக்கிறார்கள். திண்டுக்கல்லில் வெள்ளைக்காரார் ஸ்ரீமான் பீடர்ஸன் என்ற சிரத்தாவான் நமது சங்கத்தில் சேர்ந்திருக்கிறார். எவ்வெவ்வூர்களில் இவ் ஆங்கிலேயர்கள் இருக்கிறார்களோ

அவ்வவ்விடங்களில் இந்தியரும் ஆங்கிலேயரும் ஒருவரை யொருவர் அபிமானித்து ஒத்து உழைத்து வருவார்களே யானால் கைங்கர்யமும் சிறப்பாய் நடக்கும். இருதிறத்தாருக்கும் உள்ள ஸஹோதரபாவமும் விருத்தியடையும்.

*
* *

நமது தென்னாட்டில் நக்ஷத்திரக் கிளைச்சங்கங்கள் 128 உள. அவை பின்வருமாறு:—

அடையாறு, ஆலம்பூண்டி, அகரவட்டம், ஆலங்குடி, ஆலங்குடிச்சேரி, ஆற்காடு, அருளவாடி, ஆறுமுகனேரி, ஆத்தங்குடி, ஆத்தூர், ஐயம்பேட்டை, ஆழிச்சாவட்டம், பவானி, புவனகிரி, போரிங்பேட்டை, செட்பட், செட்டிபாளையம், சிதம்பரம், சித்தூர், கோயம்புத்தூர், காஞ்சீபுரம், குலசேகரம், கூடலூர், திண்டுக்கல், எடமணல், ஏனங்குடி ஈரோடு, எட்டியாபுரம், கடம்பூர், கதிரி, கரூர், காட்டுமன்னார்கோவில், கீழக்கரை, கொடைக்கானல், கோலார், கோம்பை, கொடாச்சேரி, கொட்டையம், குளித்தலை, கும்பகோணம், குறிச்சி, லால்குடி, மதிராஸ், மதுரை, மதுராந்தகம், மாணம்புச்சாவடி, மணப்பாறை, மன்னார்குடி, மாயவரம், மேலூர், முன்னார், முத்துப்பேட்டை, மைலாப்பூர், நாமக்கல், நாங்கநேரி, நாரசிங்கம்பேட்டை, நெடுவாசல், நாகப்பட்டணம், நாகர்கோவில், நெல்லிக்குப்பம், குரும்பலூர், மேலக்கடம்பூர், மேலப்புளியாம்பட்டு, மூணார், நந்தலூர், பல்லடம், பரமாட்டி, பெரம்பலூர், பெரம்பூர், பெரியகுளம், பெரியநாயக்கன் பாளையம், பெருஞ்சேரி, பேரூர், (கோயம்புத்தூர்) பாயிண்ட் கல்மீயர், பொள்ளாச்சி, புதுச்சேரி, பொன்விளைந்தகளத்தூர், பரங்கிப்பேட்டை, புரோதத்தூர், புதுக்கோட்டை, புதுநகரம், புத்தூர், ராதாநல்லூர், ராஜபாளையம், ராமனாதபுரம், ராயபுரம, சைதாப்பேட்டை, ஸத்யமங்கலம், சோழவந்தான், சேலம், சிவசெங்கை, சிவகாசி, சொரத்துபெரியாங்குப்பம், ஸ்ரீநிவாஸ நல்லூர் ஸ்ரீரங்கம், ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், செண்ட்தாமஸ் மவுண்ட், ஸ்வாமிமலை, தங்கச்சேரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருக்கழுக்குன்றம், திருப்பாபுலியூர், திருப்பதி, திருப்பத்தூர், திருப்பூர், திரூர், திருவாலூர், திருவெற்றியூர், திருவண்ணாமலை, திருவட்டாறு, தோப்பூர், திருச்சினாப்பள்ளி, திருவல்லிகேணி, திருவிடைமருதூர், தூத்துக்குடி, ஊஞ்ச

லூர், உசிலம்பட்டி, வடமதுரை, வேதாரண்யம், வேடசந்தூர், வீரராகவபுரம், வேலப்பதாஸ்தான்புதூர், வேலூர், வேட்டைக்காரன்புதூர், விழுப்புரம், விருத்தாசலம்.

*
* *

மேற்படி ஊர்களில் அங்கத்தினராயுள்ள ஒவ்வொருவரும் அதிகமான அங்கத்தினரைச் சேர்க்கும்பொருட்டு அவரவர்களாலியன்றமட்டில் நாலணாவுக்குக்குறையாமல் பணம் அனுப்புவார்களானால், நாம் வகைக்கு 10 துண்டுப் பத்திரிகைகளனுப்புவோம். அந்த பத்து பிரதிகளையும் ஒவ்வொரு கிளைச் சங்கத்தாரும் பலருக்குக்கொடுத்து 10-பெயர்களைச் சேர்ப்பாரானால் 1280-பெயர்களை சீக்கிரத்தில் நம் சங்கத்திற் சேர்க்க இயலும்.

*
* *

கிறிஸ்தவ பாதிரிகள் தம்மதத்தைப் பரவச்செய்து பிறமதங்களை நாசஞ்செய்கிறார்கள். கிராமங்களில் அடியோடு பூர்வீக மதங்களை தொலைத்து தம்மதத்தை நிலைநாட்ட முயலுகின்றனர். நக்ஷத்ரப் பிரகாசத்தால், ஏற்கனவே உள்ள ஒவ்வொரு மதமும் போலியாக மட்டும் நடைபெறாமல் உண்மையான ஊக்கத்தோடு உயிர்ப்பிக்கப்பெறுகிறது. அப்படியிருக்க, நம்மவரில் நக்ஷத்ர சங்கத்தாராயுள்ள ஒவ்வொருவரும் ஒரு சிறிதாவது முயற்சிக்க வேண்டுகிறோம். பேரரசான குமரன் அருள் ஒவ்வொருவரிடத்தும் நக்ஷத்ர ரூபமாய் மறைந்து உள்ளது. உங்கள் உண்மையான உழைப்பால் உங்கள் நக்ஷத்ரத்தைப் பிரகாசிக்கச் செய்மின்.

*
* *

ஒவ்வொரு ஊரிலுமுள்ள நக்ஷத்ர மெம்பர்கள் தத்தம் இருப்பிடத்தின் பிராசீன கௌரவத்தைத் திரும்ப முன்னுக்குக் கொண்டுவரும்படி அநுகிரஹிக்கத்தக்க மஹாகுரு ஒருவர் சீக்கிரம் வருவாரானால் அவர் கருத்தறிந்து அவரையாராதிக்கத்தக்க பக்தி விசுவாஸத்தையும் ஞானத்தையும் திறமையையும் அந்தந்த ஊரார் அடையும்படி முயலவேண்டும்.

*
* *

நக்ஷத்திரசங்க மெம்பர்கள் நக்ஷத்திர விஷயமாய் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்கள் இனி மாதா மாதம் நம் பத்திரிகை மூலமாய் வெளி வருமாகையால், ஒவ்வொரு நக்ஷத்திர மெம்பரும் நம் பத்திரிகையை வருவித்தல் நலம்.

ஜகத்குருதாஸன்.

அங்கம் 3. களம் 7.

காலம்—இரவு. **இடம்**—மந்திரியின் வீட்டு வாசல்
நாடகப்பாத்திரர்கள்—மந்திரியின் சேவகன்.

ம. **சேவகன்:**—(தனக்குள்) இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! இப்போது திடீரென்று நகரைவிட்டேக வேண்டிய காரணம் என்ன? நமது யஜமானருக்கு சாமான்களெல்லாம் கட்டித்தயாராயிற்று. வண்டிபோட வுத்திரவு கொடுத்தாயிற்று. நமது யஜமானர் முகமும் ஒருவாறுயிருக்கிறது. ஒருநாளுமிப்படி வாடியிருந்ததேகிடையாது. ஒருவருடனுமதிகமாகப் பேசவில்லை. தனது அருமைப்புதல்வனேதோ கேட்டதற்குக் கூட கொஞ்சம் கோபமாய்ப்பதிலுரைத்தார்.—அரண்மனையிலென்ன நடந்ததோ, யார்கண்டார்கள்? நமக்கெதற்கு இந்த விசாரம்? கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்? (அரண்மனை சேவகனொருவன் வெகு அவசரமாய் வருகிறுன்) என்னடா இவ்வளவு தடபுடல்?

அ. **சேவகன்:**—உனது யஜமானர் புறப்பட்டாயிற்ருே?

ம. சேவ.:—எதற்காக அதை நீ கேட்கிருய்?

அ. சேவ.:—அடே இப்போது விளையாடாதேநீ. உனக்குக் கொஞ்சம் கூட சமயாசமயம் தெரியவில்லை.

ம. சேவ.:—என்னடா என்னவோ பிரமாதம் பண்ணுகிருய்? என்ன சமாசாரம் சொல். யஜமானர் புறப்பட இன்னும் கால்மணி செல்லும், நீ சமாசாரத்தைச் சொன்னுல் தானுன்னை உள்ளே விடுவேன்.

அ. சேவ.:—அடே, ராஜுவுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதடா, வைத்தியர்வந்திருக்கிருர், ராஜு என்னவெல்லா

மோ உளருகிறார். மீராபாய், மீராபாயென்று புலம்புகிறார். தன்ஸ்வயப்பிரக்ஞையே கிடையாது. வைத்தியர் உடனே நமது மந்திரியை அழைத்து வரச்சொன்னார்.

ம. சேவ.:—அப்படியா! எப்படி அவருக்குப்பயித்தியம் பிடித்தது? அவர் செய்திருக்கிற அக்கிரமத்திற்கு இதுமட்டுமல்ல. வேறெது வந்தாலும் பெரிதல்ல. எவ்விதம் பயித்தியம் பிடித்தது சொல்.

அ. சேவ.:-அடே, நான்சீக்கிரம் போகவேண்டும். நானெல்லாவற்றையுமாதியோடந்தமாய்ப் பிறகு சொல்லுகிறேன். இப்போது உனது யஜமானிருக்குமறையைக் காண்பி.

(இருவருமுள்ளே போகிறார்கள்.)

காட்சி முடிகிறது.

அங்கம் 4. களம் 1.

காலம்—காலை.

இடம்—பிருந்தாவனத்திலுள்ள ஒரு கடைத்தெரு. நாடகப்பாத்திரர்கள்—ஏகநேத்திரனும் அதிமூடனும் வர்த்தகம்செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் சாமான் வாங்கிக்கொண் டிருக்கிறார்கள்.

முதல் சாமான் வாங்குவோன்—எந்தக் கடையிலேயா நல்ல சாமான்கள் குறைந்த விலைக்ககப்படும்?

இரண்டாம் சாமான் வாங்குவோன்—நல்ல ஆசைஐயுமக்கு. விலையும் குறைந்திருக்கவேண்டும், சாமானும் நன்றாயிருக்கவேண்டும். நீர் கேட்கிறதற்குத் தகுந்தாற்போலிங்கே ஒரு கடையுமிருக்கிறதே, அதல்லவோ ஆச்சரியம்?

மு.-சா:—எங்கே யிருக்கிறதையா அந்தக்கடை?

இர.-சா.:—(கையைக்காட்டி) அதோ அங்கே யிருக்கிறதே, அந்தக் கடைதான்.

மு.-சா.:—எதையா?

இர.-சா.:—கூட்டங்கூட்டமாய் ஜனங்கள் வந்து போகிறார்களே, அந்தக் கடைதான்.

மு.-சா.:—அதற்குப் பக்கத்திலொரு கடையிருக்கிறதே, அங்கே பொருவரையும் காணோமே.

இர.-சா.:—இந்த ஊரிலெல்லொரும் அந்த ஏகநேத்ரனுடைய கடையிற்றான் சாமான்கள் வாங்குவது வழக்கம். அவனுமவன் சிநேகிதனுமிவ்வூருக்கு வந்து கொஞ்சகாலமாகிறது. வெகு நல்ல வியாபாரிகளாயிருக்கிறார்கள். அதிகலாபத்துக் காசைப்படுவதில்லை. சாமான்கள் வாங்குவோரிடத்திலேயும் கடிந்து பேசுவதில்லை. அவர்களைப் பார்த்தால், கண்களுக்கு ரமணீயமாயிராது. ஆனால் குணம் நல்லது. இந்த ஊரிலுள்ள சகல ஜனங்களுக்குமவர்களை நன்றாய்த் தெரியும். குழந்தைகளுக்கோ அதை விட நன்றாய்த் தெரியும். குழந்தைகளிடத்தி லிவ்விருவர்களுக்கும் வெகுப்பிரியம். எந்தக் குழந்தை தங்கள் கடைக்கு வந்தாலும் அதற்கேதாவது தின்பண்டம் கொடுத்ததை சந்தோஷப்படுத்தி அதனுடன் விளையாடுவார்கள்.—எனக்கு நேரமாகிறது. நான் சத்திரத்துக்குப் போகவேண்டும்.

மு.-சா.:—சத்திரத்திலென்ன விசேஷமையா? நானும் வரலாமா?

இர.-சா.:—அங்கே ஒரு பக்தையிருக்கிறாள். பக்திபரமான விஷயங்களைக் குறித்தெப்போதும் பிரசங்கம் செய்துகொண்டிருப்பாள், அதைக்கேட்கப்போகவேண்டும்.

மு.-சா.:—பக்தியாவது, பரமாவது?

இர.-சா.:—அங்கு வந்தாலல்லவா தெரியும்.

மு.-சா.:—இதோ வந்துவிட்டேன், சற்றிரும்.

இர.-சா.:—நான் முன்னே மெல்லப்போகிறேன். நீர் சீக்கிரம் வாரும். (போகிறான்)

மு.-சா.:—(கடைக்குப் போய்) அடே இரண்டணாவிற்குக்கற்கண்டு கொடடா. அதையிரண்டு பொட்டணமாகக் கட்டிக் கொடு. சீக்கிரம் கொடு. நான் சத்திரத்துக்குப் போகவேண்டும்

ஏக.:—சாமீ, அப்டீனுக்கே இந்த நொடி பொளுதிலேதரேன். ரண்டு பொட்டணமும் சரியாருக்கணுமோ.

மு.-சா.:—கொஞ்சமேறித் தாழ்ந்தாலும் பாதகமில்லை பெரிதாயிருப்பதை யங்கு கொண்டு போகிறேன்.

ஏக.:—அங்கே கொண்டு போர்த்துக்குன்னா, எனக்கு பணம் வாண்டாம். இந்தாங்க வீச ரூபா.

மு-சா.:—(தனக்குள்) இதென்ன ஆச்சரியம்! என் நண்பனுரைத்ததைவிட ஆயிரம் மடங்கதிகமாக அல்லவா இருக்கிறது (வெளிப்படையாக) நான் கிரயம் தொடாமல் சாமானை யெடுத்துக் கொள்ளலாமா?

ஏக.:—பரவால்லே, சாமீ, வேறே ஏதாட்டி தருமத்துக்கு அதை வச்சுக்கோங்க.

மு.-சா.:—சரி. (போகிறான்)

மூன்றும்-சா.:—(ஒருபுறமாக நோக்கி) அந்தோ, யாரடா அங்கே? அதிசயமாயிருக்கிறது. இந்நகரத்துக்கு எங்கெங்கே யிருந்தோ புதுமைகளெல்லாம் வந்து நொண்டிருக்கின்றன.

நான்காம்-சா.—என்னையா புதுமைகள்?

மு.-சா.—வேதங்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளிலெல்லாம் பாண்டித்யமுடையவர்களால் முடியாத காரியத்தையிப்போது ஸ்திரீகள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

நா.-சா.:—ஆம். அவர்கள் விஷயங்களை யெடுத் துரைத்தாற்றான் நமது மனதிலவைகள் பதிவாய்ப் படுகின்றன. சாஸ்திரக்ஞர்களும், வேத வேதாந்தங்களில் கரைகண்டவர்களுமேதாவது சொன்னால் நாம் கவனிக்கிறோமா, இல்லையே.

மூ.-சா.:—அதுவும் வாஸ்தவந்தான். காலம் கலிகாலம். வியாசர் சொன்னபடி ஸ்திரீகளும் சூத்திரர்களும் பக்தியைக் குறித்துப் பிரசங்கம் செய்யும் காலம். நாம் ஸ்திரீ ஜனங்களை ஜடங்களெனக்கருதி அவர்களுக்கு ஒரு ஸ்வாதந்திரியமும் கொடாமலிருந்தது போக, இப்போதவர்கள் நமக்கு புத்திமதி சொல்லும்படியாய் விட்டது. ஈச்வரன் தனது குழந்தைகளி னபிவிருத்தியை வேண்டியே அந்தந்தக் காலஸ்திதியை யனுசரித்து உபதேசகர்த்தாக்களையேற்படுத்துகிறார்.—அடே, அதோபார்.

(எல்லோரும் பார்க்கிறார்கள்)

அதி.:—(ஆச்சரியத்தோடு) அண்ணே,

ஏக.:—(பரபரப்போடு) வாயை மூட்ரா,

(சாமான் வாங்குவோர்களை நோக்கி)

நான் கடையே மூடப்போறேன். இன்னமே இங்கிட்டு சாமான் கொடுக்கமாட்டம்.

(எல்லோரும் போகிறார்கள்)

அடே, அதிமூடா, கொஞ்சம் பொறுத்துக்கோ. எல்லாம் தெரிஞ்சுக்கலாம். இந்தா, இந்தப்பக்கமா வரயிலே இங்கே கூப்டுக்கிட்டு சமாசாரத்தை தெரிஞ்சுக்வம்.

(இருவரும் சாமான்களை யுள்ளே கொண்டுபோகிறார்கள். சுந்தரி துறவியாடை தரித்து ஒரு புறமாக வருகிறாள்.)

ஏக.:—அம்மா, இங்கிட்டு வாரணம்மா.

சுந்.:—யாரப்பா நீ.

ஏக.:—அம்மா, மறந்திட்டேங்களா?

சுந்.:—(உற்றுப்பார்த்து) அடே, நீ அதிமூடனல்லவா?

அதி:—ஆமம்மா, இதென்ன, இங்கிட்டு இப்டி வந்தேங்க? இதென்ன வேசம்மா. பாக்கப்படாதிருக்கே.

சுந் :—நீங்களிருவரும் பாக்யசாலிகள். உங்களிருவரினும் எவ்வளவோ கேடுகெட்டுப் போனேன் யான்.

ஏக.:—ஏனம்மா. என்ன சமாசாரம்?

சுந்.:—ஆதிமுதல் மீராபாய்க்குத் துரோகம் செய்து ராணுவுக்கு மவளுக்கும் விரோதத்தை யுண்டாக்கிக் கடைசியிலவளைக் கொல்லும்படிக்கு மவரைத் தூண்டினவளிந்தப் பாபி. உங்களுக்கிருந்த இரக்கம் கூட எனக்கில்லாமற் போயிற்று.

ஏக.:—(ஆச்சரியத்தோடு) அப்படியா, அதெல்லாமிருக்கட்டும், இங்கே என்னத்துக்கு வந்தீங்க.

சுந் :—இனியெனக்கிப்புவியிலென்ன இருக்கிறது? அந்த மீராபாயைக் கண்டு பிடித்து அவளது பாதாரவிந்தங்களில் விழுந்தாற்றுனென் மனமடங்கும்.

ஏக.:—அந்தம்மா, இந்தூர்லியே இருக்காங்கம்ம.

சுந்.:—(ஆச்சரியத்தோடு) என்ன? மீராபாயா?

அதி.:—ஆமாம்மா.

சுந்.:—ஈசா, நானுன்னையெப்படிப் புகழ்வது? உன்கருணையை யெப்படி வர்ணிப்பது? மஹாபாபியாகிய என்மீது கூட உனக்கிவ்வளவு கருணையா? கும்பிடப்போன தெய்

வம் குறுக்கிட்டது போலல்லவா இருக்கிறது! அப்பா, அவள் எங்கேயிருக்கிறாள்? என்னைச் சீக்கிரத்திலங்கே யழைத்துச் செல்லுவீர்களா? என்மன மவளைக்காணத் துடிக்கிறது.

இருவரும்.—அழச்சிண்டு போரம்மா, இப்படி வாங்க.

(போகிறார்களனைவரும்.)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், யம். ஏ.

சமாசாரக் குறிப்பு.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச்சேர்ந்த ஆலங்குடியில் நாளிது மார்ச்சுமீ 23உயன்று ஐக்கிய நாணயசங்க கான்பெரன்ஸ் நடைபெற்றது. சமஸ்தானத்திலுள்ள 22 சங்கங்களில் 17 சங்கங்களிலிருந்து சுமார் 240 பிரதிநிதிகள் கூடினார்கள். சமஸ்தானம் சூபரண்டெண்டெண்டவர்களாகிய விட்னிபர்ன் துரையவர்களும், திவான் வி. ஆர். துரைராஜா அவர்களும் சீப்கோர்ட்டு ஜட்ஜுகள் மகா-ள-ஸ்ரீ பத்மனாபசாஸ்திரிகள் பி. ஏ. எம். எல்., மகா-ள-ள-ஸ்ரீ சிவஞான முதலியாரவர்கள் பி.ஏ. பி.எல், மகா-ள-ள-ஸ்ரீ திவான் பேஷ்கார் பி.வி. காமேசுவர ஐயர் அவர்கள் எம். ஏ., முதலிய பிரமுகர்கள் சபையை அலங்கரித்தனர். மதுரை பிரஹ்மஞானசபை அங்கத்தினரும் மேற்கூறிய கான்பெரன்ஸ் உபசரணை சபையாரின் தலைவரும் மாஜி தாசில்தாருமான மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். இராமச்சந்திர ஐயர் அவர்கள், உபசார பத்திரிகை வாசித்து பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் வரவேற்றார்கள். ஐக்கியம் அல்லது கூட்டுறவுஎன்பது இந்தியர்களுக்கு புதிதான குணமல்ல வென்றும், பூர்வகால முதல் இந்தியர்களுக்கு சுவபாவமாகவே இந்நற்குணம் ஏற்பட்டிருந்தது என்றும், ஆனால் பிற்காலத்தில் வியாபாரத்திற்காகவும், படையெடுத்தற்காகவும் இந்தியாவுக்குள் வந்த அன்னியர்கள் சேர்க்கையால் கூட்டுறவு குன்றியதாகவும், கூட்டுறவு மிகவேண்டுமாயின், தன்ன

யம் கருதும் சுவபாவத்தை கொஞ்சம் விட்டு பிறர்நலம் நாட வேண்டுவதவசியம் என்றும், ஐயரவர்கள் கூறி ஸிட்னிபர்ன் துரையவர்களை கான்பரன்சை துடங்கும்படி வேண்டினர்கள். அவர்களும் கூட்டுறவினல் ஏற்படும் நன்மைகளையும் அதைவிருத்தி செய்யும் முறைகளையும் எடுத்து விளக்கினர். அப்பால் பலதீர்மானங்கள் நிகழ்ந்தன. ஸமஸ்தான பள்ளிக்கூடத்தின் மாணுக்கர்களில் 15 வாலிபர்கள் பிரதிநிதிகளை உபசரித்தும் வேண்டிய உபகாரங்களையும் செய்தார்கள். மேற்கூறிய கான்பரன்ஸ் செவ்வனே நடைபெற்றது. மதுரை பிரஹ்ஞானசபை அங்கத்தினருள் ஒருவாரான கே எஸ். இராமச்சந்திரய்யரவர்கள் இவ்விதமான பரோபகார கைங்கரியங்களைச் செய்து கொண்டிருப்பது யர்வருக்கும் திருப்திகரமாயிருப்பதுடன் ஏனையோருக்கும் காலத்தை எங்ஙனம் நன்ருய்க்கழிப்பது என்று விளக்க போதிய உபதேசமாயும் இருக்கிறது.

கநூர்:—இத்திருநகரின் கண், திருப்பூரில் வக்கீலாகவிருந்து சென்ற சிலவருஷங்களாக லோகோபகாரமே தனதுகடமையாகக் கருதி உழைத்துவருகிற மகா-ா-ா-ஸ்ரீ அனந்த நாராயணசாஸ்திரிகள் 13—3—18ல் "மகான்கள் லோகத்தில் எப்பொழுதும் இருக்கிருர்கள்" என்பதைப் பற்றியும் 14—3—17ல் "உலககுருவின் அவதாரம் அதிசமீபத்தில் நிகழப்போவதை"ப்பற்றியும்காரண காரியத்தோடு நன்ருக உபந்யாஸம் செய்தார். உலககுரு அவதாரம் உண்மையாக யிருக்கவேண்டுமென்றும் நாம் நற்குணங்களைவிர்த்தி செய்துவரவேண்டியது அவசியம் என்றும் ஜனங்கள் உணர்ந்துவருகிருர்கள். இவ்வூரில் பிரஹ்மக்ஞானசங்கத்தைச்சேர்ந்தவர்கள் ஐவர் இருக்கிருர்கள். இவ்வூரில் அதற்காக ஒரு கட்டடமில்லாமையால் ஜனங்களுக்குள் பிரஹ்மக்ஞானத்தைப்பரவச்செய்வது சாதகக்குறைவாகவிருக்கிறது. பிரஹ்மக்ஞானத்திற்காக ஒரு பொதுக்கட்டடம் கட்ட பிரபுக்கள் விரும்பினல் நடைபெறும். ஆண்டிபட்டிஜமீன்தார் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்களும் மற்ற நாட்டுக் கோட்டை செட்டியார்களும் தயவுசெய்து திரவிய உதவி செய்யின் கட்டடம் சீக்கிரமாகவும் சுலபமாகவும் முடிவுபெறும்.—ஆர். வெங்கட்டராமையர்.

இந்திய புத்திரிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஸகோதரிகளே!

இக்காலத்தில் நீங்கள் கூர்ந்து உணரவேண்டியதொன்றுண்டு. அதாவது, ஸ்திரீகளுக்கு அன்பு மிகுதி; புருஷர்களுக்கு ஞானம் மிகுதி; ஆனாலும், ஸ்திரீபுருஷர் ஒவ்வொருவருக்கும் இரண்டும் அதி அவசியம். புருஷர்களுடைய தர்மத்தைக் கூட இருந்து முன் செலுத்துவதற் கேற்ற ஞானம் ஸ்திரீகளிடத்திலும், பெண்மக்களிடத்தில் கௌரவபுத்தி கொள்ளத்தக்க அன்பு புருஷர்களிடத்திலும் தற்காலத்தில் மிகக் குறைவு. ஒரு குடும்பத்தில் ஸ்திரீ புருஷர் இருவரும் நேர்மையா யிருக்கவேண்டியது போலவே, ஒரு தேச க்ஷேமத்திற்கும் இன்றி அமையாதது, அத்தேசத்து ஆண், பெண் மக்களின் ஒற்றுமையேயாம். நமது இந்தியாவின் அபிவிருத்தியை ஒரு ரதத்திற்கு ஒப்பிடுவோமானால் நீவிரும் நாமும் அதற்கு அவசியமான இரண்டு சக்கரங்களாவோம். ஒற்றைச் சக்கரம் மட்டும் பயன்படாது. இதுதான் நீவிரும் நாமும் அறியவேண்டிய உண்மை.

இக்காலத்தில் ஓர் தவறான எண்ணங் கொண்டிருக்கிறோம். இது, ஜன்மாந்தரங்களைப் பற்றிய உண்மையை ஊன்றியறியாததால் வந்த வினை. இப்போது புருஷர்களாயிருப்பவர் பலர் அநேக முன் ஜன்மங்களில் ஸ்திரீகளாயிருந்து, ஸ்திரீ சுபாவத்தையே அதிகமாய் விருத்தி செய்திருக்கிறார்கள். அதனால் தான் சில ஆண்மக்களிடமுங் கூட, காம்பீர்யம் அதிகமாய்ப் பிரகாசியாமல், கருணையும், அச்சமும், கூச்சமும், வெட்கமுமே மிகுதியாய் விளங்குவதைக் காண்கிறோம். இவர்களை, ஸங்கீதம் கவித்வம், நாடகம், முதலிய கலைகளிற் படிப்பித்தல் தான் தகும். இவர்களுக்கு இயற்கையாகவே இவைகளில் ஓர் நாட்டம் இருக்கும். பரோபகாரங்கருதி உழைக்க இவர்கள் தளரார். அன்பின் வழிபற்றியே இவர்கள் செல்வர். தத்துவமும் தர்க்கமும் இவர்களுக்கு ருசியாயிரா.

அநேக பூர்வஜன்மங்களில் ஆண்மக்களாயிருந்து இப்போது பெண் வடிவத்திலிருப்போரையும் பார்ப்போம். நல்ல மனோவல்லமையையும், தர்க்க, தத்துவ, பௌதிக சாஸ்திரங்களில் தீவ்ர நாட்டத்தையும், இவர்களிடம் காண்போம். பிறர் தம்மை எவ்வாறு கருதினாலும், தாம் நீதியெனக் கண்ட வழியில் பயமின்றி இவர்கள் செல்வார்கள். ஸ்ரீஹெலிநாம்பாளம்மையார் ஸ்ரீபெஸண்ட் அம்மை

யார் ஸ்ரீஸரோஜினீதேவியார் இவர்கள் இதற்குச் சான்ருவர். ஆகவே சரீர வேறுபாடுகளைக் கருதுவதோடு, சுபாவங்களில் ஒற்றுமையையும் கவனிப்போமானுல், உலகத்தில் சஹோதர தர்மம் நிலைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் அன்பையும், ஞானத்தையும் நம் சீலத்தில் நிறைய அமைத்துக் கொள்ளவேண்டும். அன்பை யிழந்த ஞானமும், ஞானத்தை யிழந்த அன்பும் பயனற்றவை. இதுமட்டுமோ? தீமையையுமல்லவோ விளைக்கின்றன! எப்படி யென்று பார்ப்போம். ஐரோப்பிய யுத்தத்தில், அரும் பெரும் காரியங்களை சாதிக்கக் கூடிய மஹா புத்தி பராக்ரமசாலிகள் தம் ஞானத்தையும், சக்தியையும் எப்படி உபயோகிக்கிருர்கள்? ஒரு க்ஷணத்தில் பதினுயிரக் கணக்கான ஜனங்களைக் கொல்லும் வழியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். அன்பிழந்த ஞானம் கொடும் பகையாயிற்று. அங்ஙனமே ஞானமிழந்த அன்பும் துவேஷமாகவும், குருட்டு பக்தியாகவும் விளையும். எப்படியெனில், "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்னும் உண்மையை அநேகர் அறிகிருேமில்லை. அறிவோமானுல், நம்மையும், நம் பிள்ளைகளையும், நம் பந்துக்களையும், நாம் எவ்வளவு உயர்வாய் மதிக்கிருேமோ, அப்படியே பிறருக்கும், அவரவர் பிள்ளைகளும் பந்துக்களும் உயர்வு என்று உணர்வோம். அப்போது எல்லோரையும் ஸமமான அன்போடு கருதுவோம். இது இல்லாததால் தமது குழந்தைகளை நேசிக்க எண்ணி, பிறர் குழந்தைகளிடத்து அசூயை கொள்கிருேம். ஞானமில்லாமல் அன்பு செலுத்தத் தொடங்கி துவேஷத்தைக் கொள்கிருேம். எது எக்காலத்திலும் அழியாத ஸத்தியமா யுள்ளதோ, அதை யறிவதுதான் ஞானம். அதனிடத்து பிரியங்கொள்வதுதான் அன்பு. ஸத்தியத்தைத் தழுவாத அன்பும் ஞானமும் முரண்படும், சிதைந்துபோம். அன்பும், ஞானமும் ஸத்யத்தைத் தழுவாமல் முரண்படவே, உடலையும், உருவத்தையும் பெரிதாக நினைக்கிருேம். உயிரையும் குணத்தையும் கவனிக்கிருேமில்லை. வெளிடம்பத்தைக் கண்டு மயங்குகிருேம். உள்ளத் தூய்மையை அசட்டை பண்ணுகிருேம். அதனுல், உலக வாழ்வு ஈசுவர கைங்கர்யமாய் நிகழாமல் உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. இப்படிச் சீர்குலையும் காலங்களில்தான் பகவான் அவதரிப்பதாகக் கீதா சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, "தருமம் அழிந்து அதர்மம் ஓங்கும்போது நான் அவதரிக்கிறேன்" என்பதேயாம். தற்கால யுத்தத்தை தர்மாதர்ம யுத்தமென்று நாம் எங்ஙனம் கூருமலிருப்பது? இக்காலத்தில் ஞானம் அபிவிருத்தியாகி யிருப்பதற்குத்

தக்கபடி உலகத்தில் அன்பு இல்லை. நமக்குத் தெரிந்தமட்டில் பிறருக்கு கற்பிக்க வேண்டுமென்ற அன்பும், நாம் கற்றுக்கொண்டதற்குத் தக்கபடி நேர்மையாய் நடக்கத் தீவிர பக்தியும் இப்போது நம்மவருள் மிகத்தேவை. எல்லோரிடத்தும் ஸகோதர பாவமான அன்பு கொள்ள வேண்டுமென்று நாம் எவ்வளவு நன்ருயறிந்தாலும், நங்கண்ணுக்குப் பிரியமான ரூபவான்களிடத்திலும் ரூபவதிகளிடத்திலும் மட்டும் அன்பு கொள்கிருேமே யொழிய, மற்றவர்கள் எவ்வளவு நற்குணம் பொருந்தியவர்களாயிருந்தாலும், அவர்களைக் கவனிக்கிருேயில்லை.

நந்தேசத்து ஸ்திரீ புருஷர்களாகிய நாம் பரஸ்பர கௌரவத்தோடு ஒருவரை யொருவர் நன்குமதித்து ஒருங்கு சேர்ந்து, நம் தேசத்து பொதுநலம் ஒன்றிற்கேனும் உழைக்க முன்வராத இக்காலத்தில், கருணையங் கடலான ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரிப்பாராளுல், அவரை நாம் அறிந்து நன்கு மதிக்கமுடியுமா? லோகாநுக்கிரகத்திற்கு அவர் புருஷ ரூபமாய்த்தான் வருவார், ஸ்திரீ ரூபமாய் வரமாட்டார், ஸ்திரீ ரூபமாய் வருவார், புருஷ ரூபமாய் வரமாட்டார் என்றும் நாம் கருதல் நியாயமோ? ஒரு மஹாபுருஷன் வந்தால், அவருக்கு ஸ்திரீ யென்றும் சூத்திரனென்றும் பேதபுத்தி இருக்குமோ? “ஸ்திரீகளும், வைசியர்களும் சூத்திரர்களும், என்னையடையத் தகுந்தவர்கள்” என்று பகவான் கூறியிருக்கிருரே! ஸ்திரீ ரூபமாய் பகவான் வந்தால், புருஷர்கள் அவரையணுகி அவரை வணங்கி, அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், புருஷ ரூபமாய் பகவான் வந்தால், ஸதிரீகள் அவரையணுகி அவரை வணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், எற்றவிதமாய், நந்தேசத்தில் ஸ்திரீ புருஷர்களுக்குள அந்யோந்யமான முறைமை நிகழ்கிறதென்று நாம் சொல்லமுடியுமா? புருஷர்களுக்கு இக்காலத்தில் பக்தியே அழிந்து போயிருக்கிறது. ஸ்திரீகளாகிய நீங்கள் பக்தி ரஸத்தை அறிவதுபோல புருஷர்களுக்கு அறியச்சக்தி கிடையாது. இக்காலத்திலும் பகவான்|வருவதாகப் பிரஸ்தாவம் உள்ளது. உலகப்போராட்டத்தை நிறுத்தவும் அவர் வரவை வேண்டுகிருேம். ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் கோபஸ்திரீகள் எத்தகைய உள்ளுணர்வோடு பகவானுடைய பெருமையைப் பிரகாசப்படுத்தி வந்தனரோ, அத்தகைய உள்ளுணர்வோடு இக்காலத்திலும் பகவானுடைய அவதாரத்தை ஆவலாய் எதிர் பாருங்கள். முற்காலத்தில் கோபஸ்திரீகள் விதைத்த பக்தியே இக்காலம் வரை உலகத்தில் நிலைத்திருக்குமாளுல், அவ்

வித பக்தியை இக்காலத்திலும் நீங்கள் பிரபலப்படுத்த என்ன தடை? இனிவெகு காலம்வரை உலகில்பக்தி நிலைத்திருக்க நீங்கள் விதை ஊன்றுவது உங்கள் பாக்கியமல்லவா? ஸர்வதர்மங்களையும் நாம் அறியாவிட்டாலும், அவதாரமூர்த்தி வருங்காலத்தில் அவரிடம் பக்தியை மட்டும் எல்லோரும் கொள்வார்களானால், அதுவேபோதும். அதன் மூலமாய் தர்மங்களைத் தெரிந்துகொள்வோம். "அநந்யபக்தியால் மட்டும் என்னையறிய முடியும்" என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையிற் கூறியபடியே, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பெருமையை இடையர்களுக்கு இடையப் பெண்கள் தான் அறிவுறுத்தினரென்று கேட்டிருக்கிறோம். அதேமாதிரி, இக்காலத்திலும் வரப்போகும் பரமாசார்யனிடம், ஆண்மக்கள் அநேகருக்கு பக்தியில்லை உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்கு பக்தி பெருகவேண்டும். ஸ்திரீகளுடைய நிஜபக்திக்கு பகவான் மிகவும் கட்டுப்பட்டவர். பகவான் திரௌபதீமாநஸம்ரக்ஷணம் செய்யவில்லையா? பகவான் உலகில் உதித்து ஸங்கடங்களைத் தீர்த்து சமாதானத்தை நிலைபெறச்செய்யும்படி தீவிரமாய்ப் பிரார்த்தியுங்கள். அவர் நிச்சயம் வருவார். கோபிகைகளின் சங்கமொன்று முற்காலத்தில் ஏற்பட்டிருந்தால், இப்போதும் உங்கள் பக்திக்குரிய பொதுச்சங்கம் ஒன்று அவசியமல்லவா? பூர்வ ஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்கள் கோகுலத்தில் ஸ்திரீகளாய்ப் பிறந்தார்களென்றால், இக்காலத்திலும் அத்தகைய புண்யாத்மாக்கள் ஸ்திரீகளாகிய உங்களுக்குள் இல்லையென்று எவர் மறுப்பார்? எத்தனையோ அரிய ரத்தினங்கள் ஸமுத்திரத்திற் புதைந்து கிடப்பனபோல, உங்களுக்குத்தக்க கல்வி ஏற்படாமையால்,உங்களிடத்துள்ள நக்ஷத்ரம் பிரகாசிக்கமுடியவில்லை. உங்கள் கல்விக்கு நீங்களே முயலவேண்டுமல்லாது, வேறொருவர் உங்களுக்காகக் கற்க முடியாது.

உங்களுக்கு பக்திமயமான கல்வியை புகட்ட, உதயதிசை நக்ஷத்ர சங்கம் நம் இந்தியாவிற்கு ஓர் பெரும் பாக்கியமாகவுள்ளது. இத்தைப் போன்ற பத்திரிகைகளைப் படித்து, இச்சங்கத்தின் நோக்கங்களையும் உயர்வான பிரயோஜனத்தையும் ஜனங்களுக்குள் பரவச்செய்து, இதைப்படிக்கும் ஒவ்வொரு சகோதரியும், தம் அருகாமையில் ஒரு சிறு நக்ஷத்திரக் கிளைச்சங்கத்தை ஏற்படுத்தி வருமாறு வேண்டுகிறோம். ஒரு தெருவிலுள்ள நாலைந்து வீட்டுக்கு ஒரு சங்கம் வீதம் நந்நாட்டில் ஏற்படவேண்டும். வீண் வம்பைத் தவிர்க்கவும் பிறர் குற்றத்தை மறக்கவும் மன்னிக்கவும், பிறரிடத்து அன்போடு நடக்கவும் பழகுமின். எவரிடத்திலும் அணுவளவாவது ஒரு நற்குணத்தைக் கண்டு அதை நம்

அடையும்படிக்கும், எல்லாவற்றிலும் தம் சொந்த பிரயோஜனத்தையே பெரிதும் பாராட்டாமல், நாளுக்கு நாளதிகமாய் எத்தனை விதங்களில் பிறர்க்கு உபயோகமாய் வாழலாமென்பதையும் தெரிந்து நடக்க முயலுங்கள். ஸ்ரீ பெஸண்ட் அம்மை எப்படி உழைக்கிறார் பாருங்கள்.

அதற்குச் சாதனமாக, அருகாமையிலுள்ள நாலைந்து வீட்டுப் பெண்மக்கள் ஒருவர் வீட்டில் பிரதி தினமும் சாவகாசமான ஒரு குறித்த நேரத்தில், அல்லது வாரமொரு முறையாவது, குறித்த சமயத்தில்கூடி, அமைதியாயும் சாந்தமாயும் ராமாயணம், பாகவதம் முதலியவைகளைத் தமிழில் படிப்பதோடு அவைகளின் ஸாரங்களையும் படிப்பினைகளையும் சிந்தித்தறியலாம். நமது பூர்ணசந்திரோதயம். முதலிய பல பத்திரிகைகளை வருவித்து, நந்தேசத்தின் தற்கால நிலைமையையும், அதில் அவதாரமூர்த்தியைப்பற்றி எழுதப்படும் வியாஸங்களையும் படிக்கலாம். சந்தேகங்கள் உண்டானல் எம்மைப்போன்றவர்கட்கெழுதினால், எமக்குத்தெரிந்த அளவு தெளிவிக்கத் தயாராயிருக்கிறோம். இப்படி கிராமங்கள் தோறும் தெருக்கள் தொறும் ஸ்திரீகள் அனைவரும் ஒருமித்து, இவ்வுதயதிசை நக்ஷத்ர சங்கத்தை ஏற்படுத்தி நடத்தி வருவீர்களானல், நம் இந்தியாவில் புதிய விளக்கேற்றி வைத்தமாதிரி பிரகாசம் ஏற்படும். ஞான மணம் கமழும். லக்ஷ்மியும், ஸரஸ்வதியும் நம் இந்தியத் தாயோடு ஒருமித்து வாழ்வார்கள்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு

என்று திருவள்ளுவர் எழுதியுள்ள பிரகாரம், எவ்விடத்திலும் நல்லோரை உபசரிக்கத்தக்க ஸ்திரீ சங்கங்கள் ஏற்படவேண்டும். எவர் சொல்வதையும் கேட்குமுன் தள்ளிவிடலாகாது, கேட்குமுன் அங்கீகரித்தலுமாகாது.

உங்கள் பேதமைக் குணம் நல்லதேயானலும், அறிவின்மையைக்கண்டிப்பாய் தவிர்க்கவேண்டும். உங்கள் பூரண பக்தியையும் தைர்யத்தையும் கொண்டு அறிவின்மையைவிலக்கவேண்டும். உண்மைப்பரோபகாரிகள் இன்னரென்று அறிந்து அவர்களுடன் ஒத்துஉழைக்கவேண்டும். அவர்களை ஆதரித்து ஆஷாடபூதிகளைத் தவிர்க்கவேண்டும். பழத்தின் ருசியைக்கொண்டு மரத்தின் யோக்யதையைநாம் அறிவதுபோல பரோபகாரம் என்னும் ஒரேகுறியை முன்வைத்து, இன்னர் பேரியோர் என்று அறியலாம். அப்படி அறிந்த

க்ஷணமே நீங்கள் அவருடன் ஒத்து உழைக்க முன்வரவும் வேண்டும். பர்த்ருஹரி சொல்லியபடி உலகத்தின் நீதி நிபுணர்கள் உங்களைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், ஐசுவர்யம் பெருகினாலும், குறைந்தாலும், இன்று மரணம் வரக்கூடியதாயிருந்தாலும், அல்லது ஒரு யுகம் கழிந்துதான் மரணம் வரும் என்றாலும், நியாய முறையினின்றும் ஒரு மயிரிழை கூட தீரர்கள் விலகமாட்டார்கள். இதை உங்கட்குச் சொல்வானேன் என்றால், நியாய வழியில் செல்வோருக்கு அபரிமிதமான இடையூறுகள் அவசியம் வரும். அவைகளை அலக்ஷியமாய் எதிர்க்கவேண்டும். இத்தகைய சீலமில்லாதவர்கள் பிறர்க்கு ஒரு போதும் உபயோகமாய் வாழ இயலார். ஆகவே நந்தேசத்து ஜயசீலர்களும் ஜயவீரர்களுமான தற்கால மூற்காலத்து ஸதிரீ புமான்களின் சரித்திரங்களைப் படிப்பீர்களானால், உங்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி, இனி நம் தேசத்தில் பிறக்கும் ஜீவர்கள் ஒளி நிறைந்த நக்ஷத்திரங்களாய்ப் பிரகாசிக்கத்தக்க சரீரங்களைக் கொடுக்க வல்லவராவீர்கள். உஙகள் தகைமைக்குத் தக்கபடி சிறிதளவாவது இதில் உதவுவீர்களானால், அது பகவானுக்குச் செய்த கைங்கர்யமாகும்.

“சீவனென்னச் சிவனென்ன வேறில்லை” என்னும் திருமூலர் வாக்குக்கிணங்க, ஜீவர்களின் க்ஷேமத்திற்கு நாம் உழைப்பதே ஸ்வாமியினுடைய சித்தத்தை யறிந்து உழைப்பதாகும்.

இன்று முதல் மூன்று மாதத்திற்குள் சந்தாதார்களாக விரும்பி யெழுதும் ஸ்திரீகளுக்கு நமது பூர்ணசந்திரோதயம் அரைச்சந்தா விகிதத்திற்குக் கொடுக்கப்படும். இம்மாதிரிபத்திரிகைகளை வேண்டுவோர் தம்மாலியன்ற எவ்வற்பத் தொகையாவது எமக்கனுப்பினால், அதற்குத் தக்க துண்டுப் பத்திரிகைகள் அனுப்பப்படும். அவைகளைப் பிறர் பலருக்குக் கொடுத்து நம் சங்கத்தைப் பரவச் செய்யலாம்.

தங்கள் சகோதரன்,

B. S. ராமசுப்பையர்,

காரியதரிசி.

உதயதிசை நக்ஷத்ர சங்கம்,

மதுரை.

புத்தக வரவு.

தசேலர்—ஐந்தங்கமுள்ள அருந்தமிழ் நாடகம்—இஃது கம்ப ராமாயணப் பிரசாரகர் பிரஹ்மஸ்ரீ மோ. வெ. கோவிந்தராஜ ஐயங்காரால் இயற்றப் பெற்றது. இதன் விலை காகித அட்டை ரூ 1-0-0. காலிகோ அட்டை 1—4—0. சிறந்தவொரு பாகவதக் கதையை இனிய நடையில் மிகவும் அழகான நாடக ரூபமாக அமைத்துளது. ஆரம்பமுதல் அந்தம்வரை உயர்நீதிகளடங்கப் பெற்றது. சிறுவர் சிறுமிகள் மனத்தில் நற்புத்தியும் நல்லொழுக்கத்தில் பத்தியும் புகட்டக்கூடியது. பரம்பொருளிடத்தில் உண்மையான பக்தி விளைக்கக்கூடியது. சிறுவர்களன்றிப் பெரியவர்களும் வாங்கிப் படித்து பயன் எய்துவார்கள் என்று எண்ணுகிறோம்.

"அவன் பெயரால்" என்னும் அரியநூலின் முதற்பாகம் திருமியச்சூர் பிரஹ்மஞ்ஞான சங்கக் காரியதரிசி ஆர். ஸ்வாமிநாதய்யர் வேண்டுகோளால் சாந்திவசனத்தொடரின் 4, 5-வது பாகங்களாக ஏ. ரத்ன சபாபதி முதலியாரவர்களால் பிரசுரிக்கப் பெற்றது. இதன் விலை அணா 4. பிரஹ்மஞ்ஞான சபைஅங்கத்தினருள் ஞானத்திற்சிறந்தவராகிய ஸ்ரீமாந் ஸி. ஜீனராஜதாஸரவர்களால் உலகமுய்யுமாறு உபதேசரூபமாய் வெளியிடப்பட்ட உத்கிரந்தமான 'In His Name' என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இம்மகானுடைய நூல்களின் சொன்னயமும், பொருணயமும், தொடைநயமும், நடைநயமும் யாவரானும் போற்றத் தகுந்தது. மேலும் இந்த கிரந்தத்தில் கூறப்பெற்ற விஷயமோ, அந்தரங்க சிஷ்யனுக்கு அவன் மூத்தஞான சகோதரனால் ஞானபிவிருத்தி யினிமித்தம் ஆத்ம விகாஸமுறைகளையும் குஹ்யமான விஷயங்களையும் பற்றி சொல்லப்பட்டது. இந்த சிறந்த ஞானசாஸ்திரத்தை மொழி பெயர்த்தல் சுலபமானதன்று. முதனூலின் உட்கருத்தை நன்குயறிந்து அதை வேறு பாஷையில் வெளியிட வேண்டுமானால் இரண்டு பாஷைகளிலும் தேர்ச்சியும், கூறப்பட்ட விஷயத்தில் பழக்கமும் வேண்டும். இல்லையேல், தமிழ் மொழி பெயர்ப்பானது பயனற்றதாய் விடும். இந்நூலின் மொழி பெயர்ப்பாசிரியர் பெயர் வெளியிடப்படவில்லை. அவர் யாராயிருப்பினும், அவரையும், சாந்திவசனத்தொடரை வெளியாக்கிவருவோர்களையும் மொழிபெயர்ப்பின் குணத்தைப்பற்றி சிலாகிக்கிறோம். தமிழ் நடையும் நன்குயிருக்கின்றது. முதனூலின் பொருளையும் சரியாய் துலக்கியுள்ளது. தாயுமானவர் முதலிய கவிவார்களின்பாட்டுகளை ஆங்காங்கு சமயத்துக்குத்தக்கவாறு சான்றாக

கீழே வரைந்துளது. இந்தஉயர்நூலை தமிழில் மொழிபெயர்த்து தமிழுலகுய்யுமாறு உபகரித்த சாந்தி வசனத்தொடரை பிரசுரம் செய்தவர்களுக்கு நாம் மிகவும் நன்றிபாராட்ட கடமைப்பட்டுளோம். இனி விரைவில் அடுத்த பாகமும் வெளிவரும் என்றுஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

1916-ம் வருஷ இந்தியன் நேஷ்னல் காங்கிரஸ் அக்கிராசனாதிபதி அவர்கள் உபந்யாசம் மதுரை வக்கீல் ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யரவர்களால் மொழி பெயர்க்கப் பெற்றது. விலை அணா 2. மதுரை ராமனாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாரால் பிரசுரிக்கப்பட்டது. இந்திய தேசாபிமானிகளில் முதன்மையானவருள் ஒருவரான பாபு அம்பிகாசரண மஜூம்தார் அவர்களது அழகான உபந்யாசத்தை தெளிவான நடையில், மிகவும் அழகாக தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இதேவிதமாக அநேகம் ஆங்கில புத்தகங்களை தமிழுலகுக்குப் பயன்படும்படி செய்தலே ஆங்கிலமும் தமிழும் அறிந்த தேசபக்தரின் முதற் கடமையாகும். இது 52 பக்கம் அடங்கிய புத்தகம். இதன் விலை மிகவும் சொற்பமாகவிருக்கிறது. எல்லோரும் இதை எளிதில் வாங்கி உபயோகிக்கும்படிக்கு குறைந்த விலைக்கு கொடுப்பதாக தீர்மானித்திருக்கிறதாக எண்ணுகிறோம். வேண்டுவோர் மதுரையிலிருக்கும் மேற்கூறிய கமிட்டி காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம். அடுத்த பதிப்பில் இப்பதிப்பின் கண்ணுள்ள பிழைகளைத் திருத்தி பிழையில்லாமல் இதே உபந்யாசம் வெளியிடப் படவேண்டும் என்பது எமது கோரிக்கை.

ஸ்ரீஸத்ஸம் பாஷிணி—ஆக்கியோர் ஸ்ரீ ஓம் பிரகாச சுவாமிகள் நீலகிரி. இதன் விலை ரூ 1. ஸம்பாஷணை ரூபமாக அதியுன்னதமான வேதாந்த உண்மைகளை உலகத்தார் அறியுமாறு விளக்குவதற்காக வெளிப்போந்த கிரந்த மிது. ஆங்காங்கு ஆத்மபோதம், உத்தரகீதை, வள்ளலார் சாஸ்திரம், கைவல்ய நவநீதம், முதலிய ஸம்ஸ்கிருத, திராவிட வேதாந்தநூல்களிலிருந்து மேற்கோள்களுடன், அலங்கரிக்கப் பெற்றது. சாதாரண ஜனங்களும் வாங்கிப் படித்து பயன் அடையும்படி எளிய நடையில் சம்பாஷணைகள் நிகழ்ந்தால் ஆக்கியோர் நோக்கம், இதைவிட மிகவும் நன்றாய் நிறைவேறும் என்று தோன்றுகிறது.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனும் கோடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம் இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனேஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. எனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால, அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும அவசியம இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ	0—8—0
டசன் 1-க்கு ரூ	5—0—0

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

எங்களைப்பற்றி

என்ன சொல்லுகிறார்கள்?

ஆந்திரா, இந்த ஔஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரிதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி, இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் சற்குணமே காரணம்.

பெண்கல்வி, அவர்களுடைய பொறுமையேதான் வியாபாரத்தை அதிகப் படுத்துகிறது. இப்பொழுது உலமெலாம் பரவுகிறது.

ஞானபானு, இந்த ஔஷதாலயம், "பொறுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள், இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது. அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிகமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 212 பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றி யென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தைப் பற்றியேதான்.

விபரமான லிஸ்டைப் பெற விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

45மேலக்கோபுரவீதி, மதுரை.